Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

29 NOV 1971
UNDERGRADUATE LIBRARY


# ஈழநாடு

வார மலர்

மலர் 13 | ஷவ்வால் 9 | கார்த்திகை 12 | ஞாயிற்றுக்கிழமை | (28—11—71) | இதழ் 288




பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு


# இராமநாத வள்ளலை சிங்கள மக்கள் மறக்க மாட்டார்கள்

## நினைவுதின விழாவில் டாக்டர் மலலசேகரா

[நமது நிருபர்]

**சேர். பொன். இராமநாதன் சிங்கள மக்களுக்குச் செய்த அரிய சேவையை சிங்கள மக்கள் ஒரு நாளும் மறக்கமாட்டார்கள் என்று டாக்டர் ஜி. பி. மலலசேகரா இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரி ஸ்தாபகர் சேர். பொன் நினைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

டாக்டர் மலலசேகரா மேலும் தொடர்ந்து தனது ஞாபகார்த்த உரையில் பேசுகையில் கூறியதாவது:- 1914-ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது அப்போதிருந்த பொலிஸ் மா அதிபர் மார்ஷல் சட்டத்தின் கீழ் சிங்களமக்களைக் கண்டபடி சுட்டுக்கொன்றார். இதனைத் தீவிரமாகக் கண்டித்து அவர்மீது சேர். பொன் சட்டசபையில் இதையெதிர்த்து கண்டனப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்து நீண்ட உரையொன்றை நிகழ்த்தினார். இதை நான் அப்பொழுது கலரியிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அவரின் இந்த முயற்சியால் மேற்படி வன்செயலுக்கு முற்றுப் புள்ளிவைக்கப்பட்டது.

அவரின் இந்த அரிய தொண்டை சிங்கள இனம் ஒருபொழுதும் மறக்கமாட்டாது.

இவ்வாறு சேர் பொன் சிங்களமக்களுக்காற்றிய தொண்டுபற்றி சிறப்பாக எடுத்து விளக்கிய திரு. மலலசேகரா தனது பேச்சை மேலும் தொடருகையில் கூறியதாவது:-

'கடந்த 50 ஆண்டுகளில் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக உலகம் புரட்சிகரமான பெரிய மாற்றங்களையடைந்துள்ளது. இதற்கு முன்னைய காலத்தில் இத்தகைய எந்தவித மாற்றத்தையும் உலகம் கண்டதில்லை. இந்த விஞ்ஞான மாற்றங்களால் பல நன்மைகள் உலகில் ஏற்பட்டுள்ளன. இந்த நன்மைகள் தொடர்ந்தும் நமது இளைஞர்களுக்கும் வருங்காலச் சந்ததியினருக்கும் நன்மை பயப்பதாக இருக்கவேண்டும்.

ஆனால் இந்த நன்மைகள் இளைஞர்க்குப் பயன்படக்கூடியதாகவில்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் இன்றைய இளைஞர்கள் நம்பிக்கையற்றவராய், தோல்வி மனப்பான்மையுடையவராய்க் காணப்படுகிறார்கள்.

இந்த இளைஞர்கள் கருத்தாழம் மிக்கவர்கள். நேர்மையை விரும்புபவர்கள். பிற்போக்குச் சக்தியை எதிர்ப்பவர்கள். தங்கள் கருத்துக்களுக்கு உரிய இடம் வேண்டுமெனத் துடிப்பவர்கள் இவர்களுக்கு சமூகத்தில் உரிய இடம் கொடுக்காவிடில் விஞ்ஞானத்தால் எந்தவித பயனுமில்லை.

தங்கள் கருத்துக்கு இடமில்லாததால் தான் அவர்கள் பலாத்காரத்தைநாடி தாங்கள் நினைத்ததைச் சாதிக்க வன்முறையில் இறங்குகிறார்கள்.

இந்த இளைஞர்களை நல்வழியில் இட்டுச்செல்ல நம் முன்னோர் கையாண்ட வழியே சிறந்ததாகும். அது தான் அன்பு நெறி. மற்றது கருத்துப்பரிமாறல். அதாவது ஒருவரின் கருத்துக்கு இடமளிக்கவேண்டும் புத்த பெருமானின் போதனைகள் இவைகளே. இவற்றைக் கொண்டே நாம் இளைஞரை நல்வழிப்படுத்தலாம் விஞ்ஞானத்தின் பயனும் பலனளிக்கும்.

அன்பெனும் இப்பெருங் குணத்தையுடையவர் சேர் பொன் இராமநாதன். இவர் வெறும் தேசத்தொண்டன் மட்டுமல்ல. இவர் ஒரு மகா புருஷர். அன்புநெறியைத் தனதாக்கித் தன்னைநாடியவர்கள் மீதும் அன்பு செலுத்தி இந்நாட்டுமக்களின் மனதில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டவர்.

## 'மரவரி முறை நீடிக்க போராடுவோம்'

யாழ்ப்பாணம், ஞாயிறு "ஆண்டாண்டு காலமாகப் போராடிப் போராடி மரவரி முறையை நீடிக்கச் செய்தோம். இனியும் போராடி மரவரி முறையை நீடிக்கச் செய்வோம்' என்று வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்க நிர்வாகக் காரியதரிசி திரு. ச. இராசையா யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த ஒரு கூட்டத்தில் கூறினார்.

முன்னாள் செனட்டர் திரு. நா. நல்லையா தலைமையில் நடந்த மரவரி முறை நீடிப்பதற்கான ஆலோசனைக் கூட்டத்தில் திரு. இராசையா மேலும் பேசுகையில் கடந்த 42 ஆண்டு காலமாக வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் அவர்களின் நலனுக்காக உழைத்து வருகிறது. அரசாங்கக் கட்சி எம். பி.க்களையும், அமைச்சர்களையும் வடக்குக்கு அழைத்து மரவரி முறையை நீடிக்கக் கோருவோம். அரசாங்கத்தை வற்புறுத்துவோம். அவர்கள் அந்தக் கோரிக்கையைச் செவிமடுக்காத பட்சத்தில் நேரடிப் போராட்டத்தில் இறங்குவோம். அதைவிடுத்து, போட்டிச் சங்கம் ஒன்றை அமைப்பது அர்த்தமில்லாத செயல். எமது சங்கம் மரவரி முறை நீடிக்க போராடி வெற்றிகாணும் என உறுதி கூறுகிறோம்' என்றார். மற்றும் பலர் பேசினர்.

## 'பிரிவினைக் கோரிக்கையா? அது இந்தியாவில் இல்லை!'

### நியூயோர்க்கில் கருணாநிதி

நியூயோர்க் நவ. 27 "பிரிவினைக் கோரிக்கையா? இந்தியாவில் யாருடமுமே கிடையாது!" என்று நியூயோர்க்கில் கூறினார் தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி.

அமெரிக்காவில் தற்போது சுற்றுலா மேற்கொண்டுள்ள கலைஞர் நிருபர்களிடம் இப்படிக் கூறினார்.

பிரதமர் இந்திராவின் வேண்டுதலின் பேரிலே இந்த அமெரிக்க சுற்றுலாவை மேற்கொண்டீர்களா?' என்று அவரிடம் நிருபர் ஒருவர் கேட்டதற்கு 'இந்திரா அல்ல இந்தியாவுக்காக' என்று நகைச்சுவையாக பதிலளித்தார்.

வாஷிங்டனில் எட்வர்ட் கென்னடி உட்பட பல செனட்டர்களைச் சந்தித்து பங்களா தேஷ் பிரச்னை பற்றி பேசியதாக அவர் கூறினார்.

கென்னடி முனைக்குச் சென்று நேரில் பார்த்த போது, சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் அந்தவித்தை உலகைக்கண்டு அசந்துபோய் விட்டதாக அவர் சொன்னார்.

ஐ. நா. சபைக்குச் சென்ற திரு. கருணாநிதிக்கு அங்கு அனைவர் கௌரவிக்கு முகமாக இருந்தும், வரவேற்பும் அதிக்கப்பட்டது.

தற்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் ஐ.நா பொதுச்செயலாளர் யுதான்டுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு சில நிமிடநேரம் திரு. கருணாநிதி உரையாடினார்.

## எல்லையில் இந்திரா!

புதுடில்லி, நவ.27 கிழக்குவங்கப் பிரச்னையால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எல்லையிலுள்ள இராணுவ வீரர்களை நேரில் சந்தித்துப் பேச ஆரம்பித்திருக்கிறார்.

இன்று ராஜஸ்தான் எல்லையிலுள்ள இராணுவவீரர்களுடன் பேசினார். அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டனர்.

இந்தியமக்கள் இராணுவத்தின்மீது வைத்துள்ள அளவற்ற நம்பிக்கையை இந்திரா அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

எல்லைப்பகுதியிலுள்ள இராணுவத்தலைவர்களையும் பிரதமர் சந்திப்பார். இந்த எல்லைப்பகுதி விஜயம் முடிந்ததும், கிழக்கு எல்லைப்பகுதிக்கு விஜயம் செய்வார்.

### இந்தியா திரும்பிய

## 1000 குடும்பங்களுக்கு அந்தமான் நிக்கோபா!

சென்னை, நவ 27 இலங்கையிலிருந்து இந்தியா திரும்பிய வம்சாவழிப் பிரஜைகளான 1000 குடும்பங்கள் அந்தமான் நிக்கோபா தீவுகளில் குடியமர்த்தப்படுவார்கள்

ஹரிஜன நல மந்திரி திருமதி சத்தியவாணிமுத்து இன்று இத்தகவலை சென்னையில் வெளியிட்டார்.

அந்தமான் நிக்கோபா தீவுகளுக்கு விஜயம்செய்துவிட்டுத் திரும்பிய திருமதி சத்தியவாணி அங்கு இந்தக் குடும்பங்களைக் குடியேற்றுவது சம்பந்தமாக ஆராய்ந்ததாகவும் 600 ஏக்கர் ரப்பர் தோட்டத்தில் இந்தக் குடும்பங்களைக் குடியேற்றலாமென்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

# ஜனநாயகமா? பலாத்காரமா?

**கே. பி. ஹரன்**

வரவு—செலவு திட்டத்தைப்பற்றி பாரிலிமெண்ட் சபையில் இப்பொழுது நடைபெற்றுவரும் விவாதம், நாட்டில் இன்றுள்ள நெருக்கடியான பிரச்சினையைத் தீர்க்க உதவக்கூடுமென்று தோன்றவில்லை.

கவலையளிக்கும் இன்றைய பிரச்சினை என்ன? பாரிலிமெண்ட் ஜனநாயக முறையால் பயனில்லை என்றும், பலாத்கார புரட்சிமுறையே மக்களின் ஏழ்மைப் பிரச்சினையைத் தீர்க்குமென்றும் ஒரு பயங்கர இயக்கம் கிளம்பியது. அந்த ஆபத்து அடக்கப்பட்டுள்ளதேயன்றி, இன்னும் நீங்கவில்லை. பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள். தினசரி அவர்களுக்காக அரசாங்கம் முப்பதாயிரம் ரூபாய் செலவழிக்கின்றது. பயங்கர இயக்கத்தால் நாற்பது கோடி ரூபாய்க்குமேல் அதிகப்படி செலவானதாக நிதி அமைச்சர் தெரிவித்தார். பொதுமக்களின் ஆதரவு அந்த இயக்கத்துக்கு இல்லாததாலும் பலாத்கார முறையில் மக்களுக்கு நம்பிக்கை இல்லாததாலுமே, அரசாங்கத்தால் அதை இந்த அளவில் அடக்க முடிந்தது.

வேலையில்லாக் கஷ்டம்தான் இதற்குக் காரணம் என்று சொல்லுவதற்கில்லை, ஏனெனில் வேலையிலுள்ளவர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்கள். அரசியலும் அரசியல்வாதிகளும்தான் இந்த பயங்கர இயக்கத்துக்குக் காரணமென்று உதவி சுகாதார அமைச்சர் திருமதி சிவகாமி ஒபயசேகரா பாரிலிமெண்ட் சபையில் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். யார் அந்த அரசியல்வாதிகள்?

அவர்கள் யாராயினும் சரி, பலாத்கார இயக்கத்தின்மூலம்தான் நாட்டில் விரும்பத்தக்க மாறுதல் ஏற்பட முடியுமென்றும் பாரிலிமெண்ட் வழி பணக்காரர் வழி என்றும் உண்மையில் நம்புபவர் பலருண்டு. பலாத்கார வழியைப் பின்பற்றுவதுதான் உண்மைத் தேசாபிமானமென்றும் அவர்கள் நம்புவதுடன், மற்றவர்களையும் தங்கள் வழிக்குத் திருப்பவும் முயலுவது இயற்கை. சில வெளிநாடுகள் பலாத்கார புரட்சி மூலமே விடுதலையடைந்துள்ளது உண்மை. அந்த வழியை இலங்கை போன்ற நாடுகள் பின்பற்றினால்தான் பொருளாதார விடுதலை கிடைக்குமென்றும் நம்புகின்றனர்.

ஆனால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து அரசியல் விடுதலை பெற்ற வழி, உலக சரித்திரம் காணாத ஓர் அதிசயம். அஹிம்சை வழியிலே மகாத்மா காந்தி அடிகள் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார். அதைத் தொடர்ந்து இலங்கைக்கும் அமைதியான வழியிலேயே விடுதலை கிடைத்தது. அரசியல் விடுதலை அமைதியான வழியில் கிடைத்ததுபோல் பொருளாதார விடுதலையும் அமைதியான ஜனநாயக வழியில் ஏன் கிடைக்க முடியாது? பலாத்கார வழியில்தான் நாடு முன்னேற முடியுமென்று சொல்வது சரியா? சில நாடுகள் பயங்கரப் புரட்சிமூலம் விடுதலை பெற்ற காரணத்தால், இங்கும் பலாத்கார இயக்கமே தேவையென்று எப்படிச் சொல்ல முடியும்?

ஆனாலும் அமைதியான ஜனநாயக வழியைப் பின்பற்றுகிறவர்களிடையே விரும்பத்தக்க ஒற்றுமை இல்லை. கட்சி கட்சியாகப் பிரிந்து பிளவுபட்டு ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டு [illegible] விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். பாரிலிமெண்ட் சபையிலிருக்கின்றவர்களில் அநேகமாக எல்லாரும் அமைதியான ஜனநாயக வழியில், மக்களின் நம்பிக்கையைப் பெற்று வந்தவர்கள். மக்களுடைய பிரச்சினைகளை அறிந்து அவற்றை சட்டரீதியாகத் தீர்க்க அவர்களுக்கு எல்லா அதிகாரமுமுண்டு. ஆனால் துரதிருஷ்டவசமாக அவர்களிடை ஒற்றுமையில்லை. கட்சி கட்சியாகப் பிரிந்து, ஒருவரை ஒருவர் எதிரிகளாகக் கருதுகிறார்கள். நாட்டுக்கு பலாத்கார இயக்கத்தால் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கையிலும்கூட, ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்களிடை ஒற்றுமையும் ஒத்துழைப்புமில்லாவிட்டால் அது எவ்வளவு பெரிய துரதிருஷ்டம்.

பிரதம மந்திரி ஐந்து வருடத் திட்டம் தயாரித்துள்ளார். அதை நடத்தி வைக்க மக்களின் பிரதிநிதிகள் அனைவரின் ஒத்துழைப்பும் தேவையென்றும் அரசாங்கத்துக்கு அசைய முடியாத பெரும்பான்மைப் பலம் பாரிலிமெண்டில் இருப்பினும், எல்லாக் கட்சியினரும் அடங்கிய ஒரு தேசிய அரசாங்கமே இன்றுள்ள தேசியப் பிரச்னையைத் தீர்க்க அவசியமென்று அரசாங்கக் கட்சியை ஆரம்ப முதல் ஆதரித்துவரும் 'சன்' பத்திரிகை எழுதுகின்றது. இந்தநிலையிலே தமிழரை ஒழித்துக்கட்டிவிட சில அரசியல்வாதிகள் கட்டிய ஆகாயக் கோட்டையெல்லாம் தொறுங்கிக் கீழே விழுந்துவிட்டதென்பதை முதல் முதலாகச் சுட்டிக்காட்டியுள்ளது. வகுப்புவாதம் முதலியவற்றைப் பேசும் காலம் மலையேறிவிட்டதென்றும் ஜனநாயக சக்திகளெல்லாம் ஒத்துழைக்க வேண்டிய சமயம் வந்துவிட்டதென்றும் தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டுமென்றும் கேட்கின்றது! பலாத்கார இயக்கத்தால் ஜனநாயகத்துக்கும் நாட்டுக்கும் பெரிய ஆபத்து வந்திருக்கையில் ஜனநாயக கட்சிகள் ஒன்றை ஒன்று தாக்கிக்கொண்டு காலங்கடத்துவது சரியா? இதைப்பற்றிச் சிந்தித்துத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. ஆதிமுதல் அரசாங்கத்தை ஆதரித்து வரும் பத்திரிகை கூறியுள்ள இப்புதிய யோசனையின் நோக்கமென்ன? இந்த யோசனைக்குப் பிரதமர் செவிசாய்ப்பாரா? வரவிருக்கும் மாறுதலுக்கு இந்த முக்கிய தலையங்கம் ஓர் அறிகுறியா? வகுப்புவாத அரசியலுக்கு இலங்கையில் ஒரு பெரிய முழுக்குப்போடப்படுமா? இக்கேள்விகளுக்கான பதில் சீக்கிரத்தில் தெரியலாம். இது எப்படியாயினும் அரசாங்கக்கட்சியைமட்டுமன்றி எல்லாக்கட்சியினரையும் நாட்டின் இன்றைய ஆபத்தான நிலை சிந்திக்கவைத்துள்ளது. பாரிலிமெண்ட் ஜனநாயக வழியை ஆதரித்துப் பின்பற்றுபவர்கள், இனி தற்சொலைப்போட்டிகளைக் குறைத்துக்கொண்டு அதிகம் ஒத்துழைத்தால்தான் நாடு அமைதியாக முன்னேற முடியும்.

நீங்கள்
விரும்பி
வாங்கும்
ஆனந்தா
திருக்குறள்
கலண்டர்
இப்பொழுது
உங்கள் பக்கத்து
வர்த்தகரிடம்
கிடைக்கும்.
தயாரிப்பாளர்:
ஆனந்தா
அச்சகம்
யாழ்ப்பாணம்.

விற்பனைப் பெண்கள்
யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவர்களிடம் இருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் கன்னியமானவராகவும், ஆங்கிலத்திலும், தமிழிலும் வேலை அனுபவம் உடையவராயும் இருத்தல்வேண்டும்
வேதனம்: ரூபா 175/- — ரூபா 345/-
5 X ரூ.7.50:1 X ரூ.12.50:8 X ரூ. 15/-
விண்ணப்பிக்க:
விளம்பர இல. 3183
C/o ஈழநாடு லிமிட்,
தபால் பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம்.

தரம் அறிந்து அறிஞர்கள்
கோவில்களிலும் விசேஷ வைபவங்களிலும்
விரும்பிப் பாவிக்கிறார்கள்
பத்திரமுலைக் காரத்தெடுத்த
'சூரியன்' வியாபார சின்னமுடைய
சந்தனம்
தயாரிப்பாளர்கள்:-
நாஷனல் பெர்பியூமறி வேக்ஸ்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.




குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன
நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோரன்
CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

# தாய்மையின்....

அவன் இன்னும் வரவில்லை.

கடிகாரம் எட்டுமுறை அடித்து ஓய்கிறது. உலகம் கன்னங்கரிய போர்வையினூடே பலமான காற்று சீற்றத்துடன் சுழன்று சாடுகிறது. மின்னல் வில்லாக வளைந்து கண்ணைக் கூசவைத்து மறைகிறது. முகில்கள் ஒன்றோடொன்று மோதி உருண்டு ஓடுகிறது. சுவர்க்கடிகாரத்தின் 'டிக் டிக்' ஒலி அவள் இதயத்தில் பயங்கரமாக ஒலித்து அதிரவைக்கிறது. அவள் மனதின் பிரளயம் இயற்கைக்கும் தெரிந்துவிட்டதா? வாசுகியின் மூத்த பெண் ரேஜா. பெயருக்கேற்ற அவள் வண்ணம் வாடி வதங்கிய நிலையில், களங்கமற்ற குழந்தைமுகம் துன்பத்தைக் கண்டுவிட்ட கவலையோடு கதிரையில் சாய்ந்த நிலையில் தூங்கி வழிந்து கொண்டிருக்கிறாள். அவளருகே ஒரேமையன் ராஜா பாடப்புத்தகம் அருகே கிடக்க கதிரையிலே தன்னை மறந்து உறங்குகிறான். அவர்களைப் பெற்ற அவளோ ... ...?

'என் குழந்தைகளைச் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வளர்க்கவேண்டியவள், அவர்களின் சிறப்பினை நிறைவு பெறவேண்டியவள், ஈ, எறும்பு அணுகாமல் பாதுகாக்கவேண்டியவள், இதோ இருகால்களும் வழங்காத நிலையில், வலதுகை விழுந்து கிடக்க படுக்கையோடு படுக்கையாய்க் கிடக்கிறேன். என் குழந்தை எனக்கும் பணிவிடைசெய்ய நான் மரமாக —ஜடமாக ஏற்றுக்கொள்கிறேன்'-வாசுகி நினைத்து மறுகுகிறாள். நேரம் நகர்கிறது. அவன் இன்னும் வரவில்லை. அவள் பெற்றஉள்ளம் பற்றி எரிகிறது. அவள் தாய்மை -துடித்து மறுகுகிறது. அவளின் குழந்தைகள் படும் அவலம் ஒவ்வொன்றும் அவள் ஆத்மாவை அதிரவைக்கிறது.

"சே ...... இதுதான் மனித வாழ்க்கையா? இதுதான் தெய்வநீதியா? நான் யாருக்கும் வஞ்சகம் துரோகம் செய்யவில்லையே! யாருடைய குடியையும் கெடுக்கவில்லையே! என் வாழ்க்கையில் இப்படியொரு சோதனை ஏற்படின் அதற்குக் காரணம் என்ன? மனிதன் தவறும்போது தெய்வத்திடம் முறையிடலாம், தெய்வமே தவறும்போது யாரிடம் முறையிடுவேன்' வாசுகி முடிவில்லாத கேள்வியில் இதயம் குலுங்கித் திகைக்க வகையறியாது மருளுகிறாள்.

'ஆண்டவனே இதற்கு முடிவே இல்லையா?' -வாசுகி வானம் பார்த்து விம்மி விம்மி அழுகிறாள். அவளைப் பார்த்த உலகம் மட்டுமல்ல ஆண்டவனே சிரிக்கையில் அவள் எங்கே செல்வாள்?

0 0 0

ஆறுமாதங்களின் முன் மூன்றாவது பிரசவத்தின்போது ஆண்டவன் அவளை அளவுக்குமீறி வஞ்சித்துவிட்டான். அவளின் குழந்தையை மட்டும் பறித்துவிடவில்லை. கால்களையும், கரத்தையுமல்லவா செயலிழக்க வைத்துவிட்டான். அந்த நாள் அவள் கரம்பற்றிய அவனும் குழந்தைகளும் அவளுடன் சேர்ந்து கதறித் தீர்த்தகாட்சி இன்றும் படமாக விரிகிறது. ஆரம்பத்தில் அவன்தான் எப்படி அவளையும் குழந்தையையும் தாங்கினான்.

'வசு..., நானிருக்கேனம்மா உங்களைத் தாங்க. எத்தனை செலவழித்தும் உன்னை எழுப்பி நடக்கவைப்பது என் கடமையில்லையா?' அவன் குழந்தைகளுடன் சேர்த்து அவளையும் அணைத்து பெருகிக்கொடுத்த கண்ணீரை மட்டுமா அன்று துடைத்தான். அவள் உள்ளத்திலிருந்த அவநம்பிக்கையையுமல்லவா ஓட்டத்தெறித்தான். இருமாதங்களாக காலையில் எழுந்து அவளுக்கும் குழந்தைகளுக்கும் பணிசெய்துவிட்டு குழந்தைகளுடன் வந்து விடைபெறும்போது அவள் கன்னத்தில் தட்டிக்கொடுப்பான்.

'வசு, உனக்குவேண்டியவை எல்லாம் ரெடிபண்ணிவிட்டிருக்கிறேன், வேளைக்கு மருந்தையும் உணவையும் உண்டுவிடு. இதோ இருக்கு பொழுதுபோகப் புத்தகம், ரேடியோ. வரட்டுமா? ஜாக்கிரதை". அவன் விடைபெற்று இரு கைகளிலும் குழந்தைகளைப்பற்றி அழைத்துச் செல்லும்போது அவள் படுக்கையிலிருந்தே விடைகொடுப்பாள்.

காலையிலும் மாலையிலும் அவன் திரண்ட தோளில் கரம்போட்டு அவள் தாங்கித் மெல்ல அடிபெயர்க்க முயன்று தோற்கும்போது, அவன் ஆதரவில் தன்பணியை முடிக்கும்போது வாசுகி ஆற்றமுடியாத துயரத்தால் அவன் மார்பில் முகம்புதைத்துக்கொள்வாள்.

'அத்தான் ... நான்...பாவி ... ...! நான் உங்களுக்குச் செய்யவேண்டியபணிபோக, நீங்கள் எனக்கும் குழந்தைகளுக்கும் ... ... வேண்டாம் அத்தான் —...எந்தப் பெண்ணுக்குமே ... ... இந்தக் கதி ... ... வேண்டாம்' 'வசு ... வசு ... என்ன இது குழந்தைமாதிரி. இப்போ என்ன நடந்துவிட்டது' அவள் முதுகில் தட்டி அவன் ஆறுதல் கூறுவான்.

குழந்தைகளுக்கு உணவிட்டு தூங்கவைத்த அவனும் அருகே படுத்துக்கொள்வான். ராஜா தாயின் கழுத்துக்காகத் தேடி. அவள் கழுத்தைக் கட்டிக் கொள்ளும்போது அவன் அவளைப் பார்த்து மென்னகை புரிவான்.

நேரம் ஒன்பதைத்தாண்டி நடைபோடுகிறது. அவன் இன்னும் வரவில்லை. ஆம்; அவன் மாறிவிட்டான். அவன் பொறுமையும் உள்ளத்தையும் சினிமாவும், சீட்டாட்டமும், நண்பர்களும் கவர்ந்துகொண்டுவிட்டன. அவனுக்கு மனைவி மக்கள் லட்சியமில்லை. அவர்கள் நல்வாழ்வு முக்கியமில்லை. அவன் இதயத்திலே 'எனக்காக - என் நிம்மதிக்காக வாழவேண்டும்' என்ற வெறி ஓங்கி நின்றது. நண்பர்களின் கேலி-சிரிப்பு-உல்லாசம் அவனைக் கடமையிலிருந்து இழுத்துவிலகவைத்துவிட்டன.



...தாயின் மனம் பித்து... அவள் நோயால் ஏற்பட்ட உடல் வருத்தம் ... தன் பிள்ளைகளின் கஷ்டத்தைத் தாங்கவியலாத உள்ளத்தின் தவிப்பு--- இரண்டும் இணைந்து அவளை அந்த முடிவுக்கு—

ஆம். அவனும் சபலங்கள் நிறைந்த மனிதன்தான். வெளியே காலடியோசை. அவன் வருகிறான். வாசுகியின் இதயம் பயங்கரமாக அடித்துக்கொள்கிறது. அவள் விழிகள் கலக்கமுடன் ரேஜாவையும் ராஜாவையும் நோக்கித் தாவுகின்றன. தாய்மனம் அவர்களைத் தன்னுள் அடக்கிப் பாதுகாக்கத் துடிக்கிறது. வாசற்கதவு வேகமாக மோதி ஆடுகிறது.

— நீலா —

அவன் சப்தத்தில் ரேஜா கண்விழித்து பதைப்புடன் எழுகிறாள். தாயின் அருகே சிறகுள் ஒடுங்கும் குஞ்சுபோல் ஒட்டிக்கொள்ளும் போது பிஞ்சுமேனி படபடக்கிறது. தன் குழந்தையை இடக்கையால் அணைத்து தன் நெஞ்சால் மூடுகிறாள் வாசுகி.

"ஏய்...வா... சு...கி!" அதிகாரம் கலந்த வெறிக்குரல் முன்னேவர, அவன் தள்ளாடியபடியே வருகிறான். அவனை அவன் நிலையைக் கண்ணுற்ற அவள் மனம் மாலையில் நடந்த சம்பவத்தை நோக்கித் தாவுகிறது.

0 0 0

அன்று மாலையில் முருகன் படத்தின்முன் விளக்கேற்றி வைத்த ரேஜா, ராஜாவையும் அழைத்துச் சென்று வழக்கம்போல் தாயாருக்காக வேண்டுகிறாள். கரம் கூப்பி அவளுடன் இணைந்து நின்ற ராஜா திடீரெனத் தாயை நோக்கி ஓடிவருகிறான். "அம்மா ... அம்மா நாங்க கேக்கிறதெல்லாம் சாமி தருவாராம்மா...?" ஆவலுடன் தாயின் முகம் பற்றி விரைகிறான் ராஜா.

'ஓமடா ராஜா. நல்லது கேட்டால் சாமி தருவார்.' அவள் சிரிப்புடன் கூறுகிறாள். ராஜா தாயின் பதிலால் திருப்தியடைந்தவனாய் மறுபடியும் போய்த் தமக்கையுடன் சேர்ந்து கொள்கிறான்.

'அப்பு ...சாமி... அம்மாட்டை சொல்லி உனக்கு ஒரு பைக்கற் கற்பூரம் கொளுத்துகிறேன், அப்பா குடிக்காமல் வரணும். அம்மாவுக்குக் காலும் கையும் சுகம் வரணும். சாமி அப்பா அடிக்கிறார் அம்மா அழுகிறா அக்காவுக்குச் சமைக்கவே தெரியேல்லை. சாமி அம்மாவை நடக்கப்பண்ணு" அவன் உருக்கமாகத் தன் குறைகளைச் சொல்லி இறைஞ்சியபோது, வாசுகியின் மனம் புழுவாகத் துடித்துவிடுகிறது. "ராஜா..."என்று பரிவு பொங்க அழைக்கிறாள் அவள். அவன் தாயின் அருகே ஓடிவருகிறான். ஏக்கம் பொங்கத் தாயை நோக்கியபடி "அம்மா, அக்கா தோய்க்கிற சட்டை வெள்ளையாவே வருகுதில்லை. டீச்சர் அடிக்கிறா. பொடியன்கள் என்னை விளையாடச் சேர்த்துக்கொள்ளமாட்டான்களாம் நான் அழுக்குப் பொடியனாம். 'சீ... தள்ளி நில்' என்டு துரத்துறாங்கள். அம்மா, நீ சுட்டுத்தருவியே அப்பம், சோக்காயிருக்குமம்மா, எப்பம்மா நீ எழும்புவாய்?' ராஜா தாயின் முகத்தைப் பற்றி ஏக்கம் பொங்கப் பார்க்கிறான்.

"ராஜா ... ரா...ஜா... ரா...ஜா" வாசுகி பேச முடியாமல் தவிக்கிறாள். சே இது வாழ்க்கையா? தெய்வமே ஏன் என்னை உயிரோடு

# ....தவிப்பு

வைத்திருக்கிறாய்?' என் குழந்தைகளின் வயிறு குளிர மனம் மகிழ-மற்றவர் முன் மனிதராகத் திகழ என்றைக்குமே என்னால் பணி செய்ய முடியாதா? என்றைக்குமே படுக்கைச் சடலம் தானா? வேண்டாமே இந்த வேதனை...என் குழந்தைகள் ...என் கணவர் தெய்வமே... தெய்வமே அவள் மறுகிப் புரள்கிறாள். "உயிருடன் இருந்தும் இல்லாத இந்நிலை வேண்டவே வேண்டாம்!" வாசுகி வானம் பார்த்துக் கரைகிறாள்.

0 0 0

வாசுகி உடலைச் சிலிர்த்து எண்ணத்தை விரட்டுகிறாள். நீண்ட பெருமூச்சு நெஞ்சைப் பிளக்கிறது, அவன் மறுபடியும் கத்துகிறான். 'ஏய்...ரேஜா...இங்கே...வா ...டி...! தள்ளாடியபடியே வரும் அவன் தரையில் கிடக்கும் ராஜாவை எட்டி உதைக்கிறான். மறுகணம் "வீல்" என்ற மூன்று குரல்கள் ஏக சமயத்தில் ஒலிக்கின்றன. ராஜா பதைப்புடன் எழுந்தோடி தாயைக் கட்டிக் கொள்கிறான்.

'ஏய் ரேஜா... அங்கே என்னடி செய்கிறாய்? நீ என்ன கிடையாய்க்கிடந்து அவனுக்கும் செல்லம் கொடுக்கிறாயா? என் தலைவிதி... உனது பழிக்கிறேன் பேய்களுடன்' அவன் கத்துகிறான் நாராசமாக. 'போடி ... போய்ச் சாப்பாட்டைப் போடு.'

'போம்மா ரேஜா' வாசுகி நடுக்கம் மேலிடக் கூறுகிறாள். அவளுக்குத் தெரியும். இனி நடக்கப்போகும் பலாத்காரம் அவள் உள்ளத்தில் விரக்தி பொங்கிவழிகிறது. அவளை இப்படி முடக்கிப் போட்டு இக்கொடுமையைப் பார்க்கும்படி செய்துவிட்ட விதியை என்னென்பது. ரேஜா சமையலறையை நோக்கி பலி ஆடுபோல் நடக்கிறாள்.

'ஏண்டா ராஜா, பொழுது படுமுன் நித்திரையா? படிப்பில்லை. ஒண்டுமில்லை. கழுதை...' அவன் மகனை நோக்கிப் பாய்கிறான்.

'விட்டுவிடுங்கள். அவன் குழந்தை' அவள் தன் கரத்தால் குழந்தையை அணைத்துக்கொள்கிறாள்.

'மண்ணாங்கட்டி! குழந்தையாம். ஆறுவயதாகிறது எருமை மாடுபோல்! அவன் அவளிடமிருந்து அவனை இழுத்துச்செல்கிறான். அவள் ஆற்றாமையில் சீறுகிறாள்.

'சே...,ஏன் இப்படி வதைக்கிறீர்கள். உங்களை என்ன பேயா பிடிச்சிருக்கிறது.'

'என்ன... என்ன சொன்னாய்...?' அவன் ராஜாவை விட்டுவிட்டு அவளருகே வருகிறான். மறுகணம் அவளின் இரு கன்னங்களிலும் மாறி மாறி அவன் கரங்கள் விளையாடுகின்றன.

கையை உதறிக்கொண்டு அவன் சமையலறையுள் நுழையும்போது அவசரம் அவசரமாக தட்டிலே போட்ட சாப்பாட்டை எடுத்துவைக்கிறாள் ரேஜா. தண்ணீரை அருகே வைத்தாள், அவன் சாப்பிடுவதை பயப்பிராந்தியுடன் நோக்குகிறாள். சோற்றை அள்ளி வாயில் போட்டவன் முகச் சுழிப்புடன் அவளை வெறித்துப் பார்க்கிறான். இது என்ன சோறு...கறியா? உன் ஆத்தை இருக்கிறாளே என்னைக்குட்டிச்சுவராக்க. அவளுடன் சேர்ந்து நீயும் என்னைக் கொல்லு. பத்துவயதாகிறது மரம்மாதிரி இன்னும் ஒன்றும் தெரியாது. உப்பில்லைப்புளியில்லை. சே... சே மனிதன் வாழவே முடியாது" அவன் தட்டை எடுத்து அவளின் முகத்தில் வீசுகிறான்.

வாசுகி வெறுப்புடன் சிரிக்கிறாள். அவள் உள்ளத்தில் புயல் வீசுகிறது. தினமும் இப்படியே நடப்பின் முடிவென்ன? அவள் இதயம் அவனை உளிகளாகத் துளைக்கிறது.

'என் குழந்தைகள் எனக்கு முன்னாலேயே கஷ்டப்படுகிறார்கள். அதை இரு கண்களாலும் பார்த்தும் என் இதயம் அசையவில்லை 'கூடாது. இது கூடாது" வாசுகி தன் மனம் தந்த வெறியில் ஒன்று அலறுகிறாள். அவள் ஒரு முடிவுக்கு வந்தபோது அவன் மதுவெறியில் பிணம்போல் கிடக்கிறான். குமுறிக்கொண்டிருந்த வானம் மழையாகப் பொழிந்து கொண்டிருக்கிறது.

ரேஜா காய்ச்சிய பாலுடன் தாயின் அருகே வருகிறாள். அதைத் தாயின் அருகே வைத்துவிட்டு தனக்கும் ராஜாவுக்குமாக கட்டிலருகே பாயை இழுத்துப்

(10-ம் பக்கம் பார்க்க)

"நிலமே மக்களின் நிரந்தரச் செல்வம்"

எங்களிடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனைக்கு சகல வசதிகளும் அமைந்த பல காணிகள் உண்டு.

நேரில் தொடர்பு கொள்ளவும்:

இலங்கா நிதி லிமிட்டெட்

284, காங்கேசன்துறை வீதி - 284, K. K. S. ROAD,

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

வடக்கில் தொழில் வளம் — 9

# மாவைக்கு அணி செய்யும் 'எல்பிஹேம்'



கிராமங்கள் தோறும் தொழில் நுட்பக் கல்லூரிகளை நிறுவவேண்டும். இதனால் கிராமங்களில் தொழில் வளத்தை ஏற்படுத்தலாம். கிராம இளைஞர்கள் தாம் பெற்ற தொழில் அறிவைப் பெற்றுச் சுயமாகத் தத்தம் கிராமத்தில் தொழில்களை ஏற்படுத்தி தாமும் நாடும் வளமடையும்படி செய்வார்கள். இவைதான் இன்று அரசாங்கம் அடிக்கடி கூறும் வாசகங்கள். வாசகங்கள் மட்டுமல்ல அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காலனித்துவ முறைகளை விடுத்து இவ்வாறு கிராம எழுச்சிக்கான திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பலர் இதை அன்றே உணர்ந்து கிராமங்களில் பயனுள்ள பல தொழில்களை ஆரம்பித்துள்ளார்கள்.

### வடக்கின் ஒரேயொரு வாளித் தொழிற்சாலை

இத்தகைய தொழிற்சாலைகளில் ஒன்றுதான் மாவிட்டபுரத்திலுள்ள - எல்பிஹேம் ஹவுஸ்' வாளித் தொழிற்சாலை. வடபகுதியில் வாளி உற்பத்தி செய்யும் ஒரேயொரு தொழிற்சாலையாக இது விளங்குகிறது. மாவிட்டபுரம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொரு கிராமம். மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின் பெருமையை அறியாதார் எவரும் இருக்கமுடியாது. இவ்வாலயம் இக்கிராமத்திற்கு அணிசெய்கிறது. குடிசைக் கைத்தொழில்களை விட நல்ல கைத்தொழில் வளத்துக்கும் இங்கு பெருவாய்ப்பும் மதிப்பும் உள்ளது என்பதற்கு மாவிட்டபுரம் [illegible] உற்பத்தித் தொழிற்சாலை, மேற்கூறிய வாளி உற்பத்தித் தொழிற்சாலை போன்றவைகள் நல்ல எடுத்துக்காட்டு.

கடந்த கிழமை காலை 9 மணியிருக்கும். நான் மாவிட்டபுரத்துக்குச் சென்றிருந்தபோது 'எல்பிஹேம் ஹவுஸ்' வாளித் தொழிற்சாலைக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நமது யாழ் குடாநாடோ ஒரு விவசாயப் பகுதி. நம் விவசாயத்துக்கு இங்கு ஆறுகளோ அல்லது பெரிய குளங்களோ, வாய்க்கால்களோ இல்லை. ஒவ்வொரு தோட்ட விவசாயியும் கிணற்றுநீரையே நம்பி வாழ்கிறான். எல்லா இடங்களிலும் தண்ணீர் குழாய் வசதிகள் இல்லை. 'பம்பு'களைக்கொண்டு நீர்ப்பாய்ச்சினாலும் நீர்ப்பாசனத்திற்கு பல வேளைகளுக்கும், கிணற்றில் இருந்து தம் அன்றாட தேவைகளுக்கு நீர் அள்ளவும் வாளிகள் இன்றியமையாத சாதனமாகவுள்ளன. குடாநாட்டின் இன்றியமையாத இத்தேவையைப் பூர்த்தி செய்யத்தக்கதொரு பொருத்தமான தொழிற்சாலையைப் பொருத்தமான இடத்தில் அமைத்த இத் தொழிற்சாலையின் அதிபர் திரு. அ. சின்னத்தம்பி நம் பாராட்டும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்.

எந்தவொரு பொருளைப் பார்த்தாலும் அதன் உற்பத்தித் திறன்பற்றி தேடிப் பார்த்து அறியவேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டுவிடும். இந்த வாளித் பற்றித் தொழிற்சாலைக்குச் சென்றபொழுதும் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த வாளிகளைக் கண்டவுடன் அவை எவ்வாறு செய்யப்படுகின்றன என்பதையறியும் ஆசை எனக்கு ஏற்பட்டது. இதை அதன் உரிமையாளர் திரு. சின்னத்தம்பி அவர்களிடம் நான் கூறவே அவர் மகிழ்ச்சியுடன் 'இக் குடாநாட்டில் வாழுகின்ற நீங்கள் ஒவ்வொருவரும் இதுபற்றி அறிந்திருத்தல் அவசியம் எனக்கூறி உங்கள் ஆர்வத்தை நான் மெச்சுகிறேன் என்றார். முகாமையாளர் திரு. வி. சதாசிவம் என்னுடன் வாருங்கள் நீங்கள் பாவிக்கும் வாளி எப்படி உருவாகிறது என்பதைக் காட்டுகிறேன் என எழுந்து நடந்தார். நானும் எனது சகோதரியும் அவரைப் பின் தொடர்ந்தோம்.

### 1964-ல் ஆரம்பம்

போகும்பொழுது அவர் இத் தொழிற்சாலையைப் பற்றிக் கூறுகையில் '1964-ம் ஆண்டில் இத்தொழிற்சாலையை நான் ஆரம்பித்தேன். இது அமைந்திருக்கும் நிலப்பரப்பு அவ்வளவு பெரிதல்ல. ஒரு ஏக்கர் தான். இந்த வாளிகளைச் செய்வதற்கான தகரங்கள் இங்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனவே. இவை எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கின்றன தெரியுமா? அவையாவும் பெல்ஜியத்திலிருந்து இறக்குமதியானவை' - எனக்கூறிக் கொண்டே போகையில் வாளிகளை உற்பத்திசெய்யும் யந்திரங்களை நாம் சமீபித்து விட்டோம்.

— விமலா —

### வாளிகள் இவ்வாறு உருவாகின்றன

இதற்கப்புறம் அவர் எங்களுக்கு வாளிகள் உருவாகும்முறையை விளக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. யந்திரங்கள் படிப்படியாக அந்த வாளிகளைத் தயாரிப்பதை எங்கள் கண்கள் கவனிக்கத்தொடங்கவே மூளை தானாக வாளி உற்பத்தி முறையை படிமுறையாக கிரகித்துக்கொண்டது.

இறக்குமதி செய்யப்பட்ட தகரங்களை அளவாகவெட்டி ஒரு யந்திரத்திலிட அவை வாளி அளவுக்கு மடக்கவாட்டுகளில் வெட்டித்தள்ளுகின்றன. அப்படிவெட்டப்பட்ட இரண்டு தகடுகளைப் பின்னர் பொருத்தி ஆணிகள் அடித்த பின்னர் அவற்றில் லீவுகளோ ஒழுகைகளோ விழாமல் நெருக்கி அடிக்கப்படுகிறது. நன்றாக அடித்துத் திருத்தப்பட்டபின்னர் வாளிக்கு அடிப்பாகம் இணைக்கப்படுகிறது. இந்த அடிப்பாகத்தகடும் இன்னொரு யந்திரத்திலேயேபோட்டு வெட்டப்படுகிறது. சதுரமான வீட்டுக்கள் இப்படி வட்டமாக வெட்டப்படும்போது எவ்வளவோ தகரங்கள் (கரைப்பாகம்) வீணாகின்றன. இவற்றை ஒன்றும் செய்யமுடியாது. அரவிச வேண்டியதுதான். ஆகையால் பெருந்தொகையாக தகரங்கள் இறக்குமதிசெய்யவேண்டியிருக்கிறது என்றும். இதனை அரசாங்கம் நன்குணர்ந்து மேலும்கூடிய தகரங்களை இறக்குமதி செய்ய அரசு உதவவேண்டும் என்று திரு. சதாசிவம் கூறினார்.

அடிப்பாகம் இணைக்கப்பட்ட வாளியின் நுனிப்பாகத்துக்கு கம்பிகள் வைத்து வளைத்து விளிம்புகள் கட்டப்படுகின்றன. இதனால் வாளிகள் உரம்பெறுவதுடன் நீண்டகாலம் பாவனைக்கு உழைக்கின்றன. வாளியின் காதுகள் தடித்த தகரங்களில் முக்கோணவடிவிலும் கைபிடி போடுவதற்கான துளையையும் இன்னொரு யந்திரம் வெட்டுகிறது. வளைத்தெடுத்த இரும்புக் கைபிடிகளைப் பொருத்தி வாளியின் அடிப்பாகத்தைச் சுற்றி தகடுகள் பொருத்தப்பட்டபின்னர் வாளிகளிலுள்ள இரும்புக்கம்பிகளை துப்பரவாக்குவதற்காக 'சல்பியூரிக் அசிட்' கலந்த கொதிநீரில் வாளிகளைப் போட்டுத் துப்புரவாக்கப்படுகின்றது. இவற்றிலும் துப்புரவாகாத வாளிகளைத் திரும்ப 'ஹைட்ரோ குளோரிக் அசிட்' கலந்த கொதிநீரில் போட்டு துப்புரவாக்கப்படுகிறது.

துப்புரவாக்கப்பட்டவாளிகள் பின்னர் 'ஸிங்' (Zinc) போட்ட உருக்கி உலைக்குள் வைத்து எடுக்கப்படுகின்றன. மேலும் பளபளப்பைக் கொடுக்க 'அலுமேனியம் குளோரைட்'டும் இடைக்கிடை கலக்கப்படுகின்றன. இந்தமுறை இரண்டுவகையாகச் செய்யப்படுகிறது. ஒன்று - எண்ணெய்மூலம் உருக்கி உலை தயாரித்தல். இரண்டு நிலக்கரி மூலம் தயாரித்தல். நான் சென்றபோது நிலக்கரி உருக்கி உலைதான் வேலை செய்து கொண்டிருந்தது. இந்த உருக்கு உலைக்குள்போட்டு எடுத்த வாளிகள் பின்னர் அங்கிளி உலையில் உலர்த்தப்பட்டு அடுக்கிவைக்கப்படுகின்றன. அந்த இடத்திலேயே வைத்து 'குதிரை மார்க்' லேபல்கள் ஒட்டப்பட்டபின்னர் விநியோகத்துக்கு வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றன.

நீங்கள் பாவிக்கும் வாளிகள் இவ்விதம் தான் உருவாகின்றன. இவற்றை உருவாக்கும் தொழிலாளர்கள் இத் தொழிற்சாலையின் முதுகெலும்பல்லவா? அவர்களைப் பற்றியும் நீங்களும் நானும் தெரிந்திருப்பது அவசியம்; அவர்களைப் பற்றி இத் தொழிற்சாலை உரிமையாளர் திரு. சின்னத்தம்பியிடமே கேட்டுவிடுவோம்.

### தொழிலாளர்

'இந்த வாளிகளை உற்பத்தி செய்யும் உங்கள் தொழிலாளர்களின் பயிற்சி, அவர்களின் எண்ணிக்கை, அவர்கள் உற்பத்தி செய்யும் அளவு முதலியவற்றைப் பற்றி எங்களுக்கு நீங்கள் கூறமுடியுமா?

தொழிலாளர்களைப் பற்றி கேட்கிறீர்களா? அவர்களுக்கு இந்தத் தொழிலுக்கான நுட்பங்களையும், பயிற்சியையும் நானே அளித்தேன்: நான் இத் தொழில் பற்றிக் கற்றது கல்கத்தாவில். இதற்கான யந்திர சாதனங்களையும் அங்கிருந்து நானே இறக்குமதி செய்தேன். சுமார் 50 பேர் இங்கு வேலை பார்க்கிறார்கள். மூலப் பொருட்களாகிய தகரம் பெருமளவு கிடைப்பதில்லை. கிடைத்தால் இத் தொழிலில் இன்

(11-ம் பக்கம் பார்க்க)

"குதிரை மார்க்"
கல்வனைஸ்ட் வாளிகளை இன்றே வாங்கி உபயோகியுங்கள்

- ★ குதிரை 'மார்க்' வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினால் செய்யப்பட்டவை.
- ★ எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேடமாகத் தயாரிக்கப்படுவன.
- ★ உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்

தலைமைக்காரியாலயம்
எல்பிஹேம் ஹவுஸ்,
கொழும்பு.

தொழிற்சாலை
எல்பிஹேம் ஹவுஸ்,
மாவிட்டபுரம்.

வடபகுதி விநியோகஸ்தர்
தனலக்குமி ஸ்ரோர்ஸ்,
தெல்லிப்பழை.

ஏனையபகுதி விநியோகஸ்தர்கள்
இன்டர் நாஷனல் டிஸ்ரிபியூட்டேர்ஸ்,
மெயின் வீதி. கொழும்பு-1.

...நாவல்



...ணி

...உனக்குத் தெரியும் ...நினைக்கிறன். உலக் ...குரு ... எங்களோடை ...கிறுன் ... அவனுடைய ...ன்ரை கடை...அந்தான் ...க் கடைவெறுப்ப ஆருக் ...து வாடகைக்கு விடப் ...குது... நல்ல கடை கன் ...ா? எல்லாச். சாமன்க ...போட்டு விற்கலாம்... ...நாளைக்கு நாறு ரூபா ...துமேல் வியாபாரம் நடக் ...இடம்..." துரைராசா ...முகத்தில் மகிழ்ச்சி ...யது.

...ப்பு அதை எடுப்பம்..." ...ாத்துரை அனைப் ...த்தார். அவனுடைய ...த்தில் நிலவிய ஆவல் ...துக்கு நிறைவைத் தந் ...கடைவிடமாகப் ...சு நடப்பதைக் கேட்டு ...ாருக் திக்குக்கொன்றுக ...ர்கள்.

...ாருடைய முகங்களை ...ஒரு தோட்டம்விட்டார் ...10க் பக்கம் பார்க்க]

# மாவையில் சுந்தரர் 'கையசைத்தார்' - திரண்டது கூட்டம்!

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன் வாசலில் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் நூற்றுக் கணக்கில் தேரடியில் திரண்டு நிற்கின்றனர். நான்கு வீதிகளிலும் பொலிஸார். வெளி மண்டபத்திற்கு அப்பால் சிறுபான்மைச் சமூகத்தினர் சிலர். அமைதியாக மறியல் செய்கின்றனர். அவர்கள் மத்தியில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. நாகரத்தினம். சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர்கள், புரட்சிகர சமசமாஜக் கட்சியின் இணைப்பிரதிநிதிகள். இன்னும் பலர். அன்றுதான் உச்சக் கட்டம்.

ஆலயப் பிரவேசப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உயர் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. கோவிற் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. விரத காரரும், இதர வழிபடுவோரும் வெளிமண்டபத்தில் நின்று வணங்கி விட்டுச் செல்கின்றனர். என்ன நடக்கப் போகிறது என்று எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் குருக்கள் வீட்டிலும், விருந்தையிலும், வழிபடுவோர் சிறு குழுக்களாக நின்று பேசிக் கொண்டிருக்கின்றனர்.

"கொழும்பிலிருந்து உத்தரவு வந்திருப்பதாகவும். சுந்தரர்" கைது செய்யப்பட்டிருப்பதாகவும், கடை வீதிகள். மற்றும் பகுதிகளில் பேசிக் கொள்ளப்பட்டது. வழக்கமாகக் கோவில் பகுதிகளில் காணப்படும் சுந்தரரை அன்று காலை முதல் காணவே இல்லை. அவர் கைது செய்யப்பட்டதாகவும், சிலர் பேசிக் கொண்டனர். திடீரென சுந்தரர் எங்கிருந்தோ வந்து சேர்ந்தார். பொலிஸார் அவர் நின்ற இடத்திலிருந்து சிறிது தூரத்திற்கு அப்பால் கூட்டமாக நின்றனர். என்ன நடக்கப்போகிற

## நம்பலாம் நடந்தது!

தென்பகை நூற்றுக் கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் சுந்தரருடன் சில நிமிடங்கள் பேசினார். அது ஒரு சிறு வாக்குவாதம் இதைத் தொடர்ந்து சுந்தரர் தேரடியில் நின்ற கார் ஒன்றில் ஏறி, பின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். பின் ஆசனக் கண்ணாடிகள் மூடப்பட்டிருந்தன. அங்கு சுந்தரர் கைதுசெய்யப்பட்டு விட்டார் என்றுபலர் பேசிக் கொண்டனர்.

தூரத்தில் திரண்டு நின்ற மக்களில் பலர், காரைச் செல்ல விடாது மறியல் செய்யவேண்டுமென்று பேசிக்கொண்டதுகள் காதிலும் விழுந்தது. நான் உடனே காரின் அருகில் போய் நின்று கவனித்தேன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காரின் முன் ஆசனத்தில் ஏறிக் கொண்டார். எங்கும் ஒரே பரபரப்பு. குருக்கள் வீட்டிற்கு சிறிது அப்பால் பெரும் ஜனக் கூட்டம். கோவில் வாசலில் சிறுபான்மைச் சமூகத்தவர் நூற்றுக் கணக்கில். பொலிஸாருக்கோ பெரும் பெரும் பிரச்னை. அந்த ஜனக் கூட்டம் காரின் முன்மறியல் செய்யும் நோக்கத்துடன் வந்து கொண்டிருந்தது. கோவில் வாசல் பக்கத்தில் நின்ற பொலிஸார் குண்டாந்தடிகளுடன் அவர்களை நோக்கி ஓடினர்கள். காரில் இருந்த சுந்தரர். இரு கரங்களையும் உயர்த்தி 'அமைதியாகச் செல்லுங்கள்' என பலமாகச் சத்தமிட்டார். ஆனால் கண்ணாடிகள் மூடப்பட்டிருந்ததால் சப்தம்வெளிவரவில்லை ஆபத்திலிருப்பதாக நான் சுந்தரர் கையைக் காட்டுகிறார். போலும்என அவரது ஆதரவாளர்கள் கருதியிருக்க வேண்டும். காரை நோக்கி ஓடிவந்தார்கள், மீண்டும் சுந்தரர் 'திரும்பிப் போங்கள்' எனச் சத்தமிட்டுத் தமது கைகளை உயர்த்தி சைகை காட்டினார். அதனால் பயன் ஏற்படவில்லை. அப்பெருங் கூட்டத்தினர் மேலும் நெருங்கி வந்து கொண்டிருந்தனர். பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்த முனைந்த போது ஆத்திரமடைந்த கூட்டத்தினர் பொலிஸார் மீது கற்களை வீசத்தொடங்கினார்கள் தம்மைப் பொலிஸார் கைது செய்து காரில் வைத்திருப்பதையே சுந்தரர் கை உயர்த்தி சைகை மூலம் காட்டுகிறார் என அவர்கள் தவறாக நம்பி விட்டனர்; இதைத் தொடர்ந்து பொலிஸார் அக் கூட்டத்தினரை விரட்டியடித்தனர். கூட்டத்தினர் சிதறி நாலாபக்கமும் ஓடினார்கள். கோவில் வீதியோ அல்லோல கல்லோலப்பட்டது. சுந்தரர் திடீரெனக் காரை விட்டு இறங்கி அப்பக்கம் சென்று 'அமைதியாகச் செல்லுங்கள், கூட்டமாக நிற்காதீர்கள். என்றார் அதன் பின்னரே அப்பகுதியில் அமைதியேற்பட்டது. "சுந்தரர் கைது செய்யப்படவில்லை" என்ற பேச்சு கோவில் வருதியெங்கும் பரவியது தொடர்ந்து அதன்பின், மக்கள் கலைந்து சென்று விட்டனர்.




எழுதுவது 'யோகி'

[உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி சம்பந்தப்பட்ட சுவையான சம்பவத்தை அடுத்த வாரம் படியுங்கள்]

### உண்ணா விரதம்

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர் தோமஸ் மக்-சுவினி. இவர்தான் உலகிலேயே அதிக நாட்கள் (72 நாட்கள்) உண்ணா விரதம் இருந்து இறந்தவர். உண்ணாவிரதம் இருந்த இடம்-லண்டன் சிறைச்சாலை.

# உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

**களைக்கொல்லி 'M-50'**
'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக் 'களைக்கொல்லி,' ...6 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் ...தெரிந்து அழிக்கவல்லது.

**சுமித்தியன்**
ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக குமிழ் ஈ கட்டுப் பாட்டிற்கு உகந்தது.

**'என்ட்ரெக்ஸ்' 20**
இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.

**களைக்கொல்லி 'D'**
3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.

**'அசொட்றின்' 60**
ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்றழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்.

**களைக்கொல்லி 'P-20'**
ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ் வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத்தலைத்தடுக்க இம்முறை உகந்தது.

**'ஸ்டாம்' எப்-34**
7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஏ சேர்வையாகும்.




...கெம் இலங்கை லிமிட்டெட்
செலிங்கோ ஹவுஸ் த.பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

LANKEM
இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.

## யாழ். மத்திய கல்லூரி

# நாவலர் கல்வி பயின்ற பெருமையுடன் திகழ்கிறது

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

இது வள்ளுவர் வாக்கு. இக் குறளின் மூலம் கல்வியின் சிறப்பு எமக்கு அறிவுறுத்தப்படுகிறது. திருவள்ளுவர் மட்டுமன்றி கற்றுணர்ந்த ஆன்றோர்கள் எல்லோருமே செஞ்சுவைப் பாக்களாலும் பழமொழிகளினாலும் கல்வியின் பெருமையை எமக்கு உணர்த்துகின்றனர். அத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியை வளர்த்துவரும்

**எங்கள் பாடசாலை - 3**

...தில் சிறப்புப் பெற்று விளங்குவது யாழ். மத்திய கல்லூரி எனக் கூறினால் அது மிகையாகாது.

### சுற்றாடலில்

யாழ். மத்திய கல்லூரியை அறிய விரும்பின் அக் கல்லூரியின் சுற்றாடலை அறிவது முக்கியம். கல்விச் செல்வத்தை வாரி வாரி வழங்கும் பொதுசன நூலகமும், வானளாவ முட்டிக்கொண்டு நிற்கும் மணிக்கூட்டுக் கோபுரமும் யாழ். நகருக்கே தனி பெருமேற்றும் வீரசிங்கம் மண்டபமும், ஆடலும் பாடலும் ஒருங்கே நடைபெறும் திறந்த வெளியரங்கும், பாரபட்சமின்றி நீதியையும் நியாயத்தையும் வழங்கும் நீதிமன்றமும், குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் காவல் நிலையமும், யாழ் நகர மண்டபமும், மாலைப்பொழுதைக் கழிக்க உதவும் சுப்பிரமணிய பூங்காவும் புடைசூழ யாழ். மத்திய கல்லூரி வீற்றிருக்கின்றது.

### கடின உழைப்பும் குருளையர் இயக்கமும்

யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் கடின உழைப்பையே மேற்கொண்டிருக்கின்றனர். நாடகம் என்றாலும் சரி, சங்கீதம் என்றாலும் சரி, சித்திரம் என்றாலும் சரி எதிலும் யாழ். மத்திய கல்லூரியே முன்னுக்கு நிற்கின்றது. தாய் மொழியாகிய தமிழில் மட்டுமன்றி உலக மொழியாகிய ஆங்கிலத்திலும் தொன்றுதொட்டுச் சிறந்து விளங்குகின்றது. இன்று நாடு போற்றும் நாவலர், அன்று ஆங்கில விருத்திக்காக யாழ். மத்திய கல்லூரியில் சேர்ந்து படித்த பெருமையும் இக் கல்லூரிக்கு உண்டு. அது மட்டுமின்றி எமது குருளையர் இயக்கம் கடந்த மூன்று வருடங்களாக இலங்கையிலே மிகச் சிறந்த குருளையர் இயக்கம் என்ற விருதை மாண்புமிகு மகாதேசாதிபதியிடமிருந்து பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

### விளையாட்டு

எமது கல்லூரி கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்து விளங்குகிறது. கிரிக்கட், கால்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் முதலிய சகல விளையாட்டுகளிலும் சிறந்து விளங்குகின்றது. யாழ்ப்பாணத்திலே எப்பொழுதும் கிரிக்கட் விளையாட்டில் யாழ். மத்திய கல்லூரியே முன்னணியிலிருக்கின்றது. இதற்குச் சான்றாக தற்பொழுது அகில இலங்கை பாடசாலை கிரிக்கட் தெரிவுக் கோஷ்டிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மூன்றுபேர் அழைக்கப்பட்டனர். அதில் இருவர் யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்தவர்கள். கொழும்பில் நடந்த அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி பல சான்றிதழ்களையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தால் யாழ்நகரே பெருமைப்படுகின்றது. தற்பொழுது கட்டியெழுப்பப்படும் மூன்று மாடிக் கட்டடம் யாழ். மத்திய கல்லூரியின் அழகைப் பன்மடங்காக்குகின்றது. யா. மத்திய கல்லூரியில் இலக்கிய மாணவர் மன்றம், இந்து சமய மாணவர் மன்றம், கிறிஸ்தவ மாணவர் மன்றம் போன்ற

**செல்வன் வி. ருத்திரகுமாரன்**

பல மன்றங்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் மாணவர் மத்தியில் இலக்கிய பற்றும் சமயப்பற்றும் காட்டாற்றுவெள்ளம்போல பெருகி ஓடுகின்றது. தற்பொழுது நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முத்திரை வெளியீட்டுவைபவத்தின்போது அன்றைய விடுதலை நாளை விரும்பாது எங்கள் கல்லூரி, நாவலர் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த அரும்பெருந் தொண்டுகளைச் சொற்பொழிவுகளாக மாணவர்களுக்குப் போதித்தனர்.

எமது பாடசாலையில் ஒரு நூலகமும், இரசாயனம், பௌதிகம், உயிரியல் ஆகிய மூன்று பாடங்களுக்கும் தனித்தனி ஆய்வுகூடங்களும் இருக்கின்றன. எமது உணவுப் பசியைப் போக்கிக்கொள்ள சிறந்த தேநீர்ச்சாலை உண்டு. எமது பாடசாலையில் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு மாணவர்கள் கல்வி கற்கின்றனர். எழுபத்தைந்து ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். வளர்பிறைச் சந்திரனைப்போல் எமது கல்லூரி சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

---

அன்பான தம்பி, தங்கைகளே!

நீங்கள் அனுப்பும் "எங்கள் பாடசாலை" கட்டுரையில் தவறான தகவல்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதிபரின் கையொப்பத்தோடு இத்துடன் பிரசுரமாகும் கூப்பனையும் நிரப்பி அனுப்பவும்.

அன்பான,
விமலா அக்கா

---

# 'புகைவண்டி பிறந்த கதை'

'தென்மயிலைச் சண்முகன்

மனிதனின் நேரத்தை மிச்சப்படுத்தி உலகத்தைச் சிறிதாக்கும் போக்குவரத்துச் சாதனங்கள் பல இந்த விஞ்ஞான உலகில் மிளிர்கின்றன. 6 மணிக்கு ஆயிரக்கணக்கான மைல் வேகத்தில் செல்லும் விமானங்கள்




பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் இவற்றில் எல்லோராலும் செல்ல முடிகிறதா? பணவசதி படைத்தவர்கள் மட்டுமே செல்லமுடியும், எனவே என்னதான் கண்டுபிடிக்கப்பட்டாலும் ஒரு சாதாரண மனிதனைப் பொறுத்தவரை புகைவண்டி ஒரு வரப்பிரசாதமே.

### ஜேம்ஸ்வாட்

நீராவியின் சக்தியை "ஜேம்ஸ் வாட்" என்பவரே முதன்முதலில் கண்டுபிடித்தார். 1736-ஆண்டு "கிறீனொக்" என்னுமிடத்திலே இவர் பிறந்தார். இவரின் தந்தையார் ஒரு கணிதவியல் நிபுணராவார்.

### ஆராய்ச்சி

தன் தாயார் "வெந்நீர் கடவைக்கும் பாத்திரத்தின் மூடியானது. கொதிக்கும் நீராவியின் தாக்கத்தால் மேலெழுந்துகொள்வதை அவதானித்த ஜேம்ஸின் சிந்தனை விரிந்தது. இந்த மூடி ஏன் அசைகிறது? நீராவியின் வல்லமையே வல்லமை. சிந்தனையின் முடிவில், ஆராய்ச்சியின் பின் நீராவிகொண்டு அதன்சக்திகொண்டு இயங்க வல்ல, பல நீராவி இயந்திரங்களைச் செய்தார்.

### ஸ்டீவன்சன்

ஜேம்ஸின் மறைவுக்குப் பின் ஜோர்ஜ் ஸ்டீவென்சன் என்பவர் இவரின் பணியைத் தொடர்ந்தார். ஏழையான இவர் ஆடுமாடு மேய்த்தே தன் சீவியத்தை நடத்தி வந்த அதேவேளையில் தமது ஆராய்ச்சியையும் மேற்கொண்டார். பலவாகமுயன்றார். 'பைத்தியமென' அவ்வூர்மக்கள் அவரைப் பார்த்துப் பரிகசித்தனர். ஆனால் ஸ்டீவென்சன் தன் கருமமே கண்ணாக முயன்று முயன்று

(11 ம் பக்கம் பார்க்க)

---

மாணவர் பெயர் ....................................

பாடசாலை....................................

அதிபர்....................................

---

# இராமநாத வள்ளலுடன்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நடை. சற்றும் முகமளிக்கா. மிக்க நேர்மை. அன்பான நெஞ்சம் — வேலைக்காரர் மீது அதிகன்பு. பல்துறை வல்லவர். அவர் ஒரு தெய்வப்பிறவி. அவருக்குமுன் அவர்மாதிரி எம் மத்தியில் யாரும் பிறந்திருக்கமாட்டார். இனிமேலும் அப்படியாரும் பிறப்பார் எனவும் நம்பவில்லை என்று திரு சங்கரப்பிள்ளை அவர்கள் சேர் இராமநாதன்பற்றி விபரிக்கையில் கூறினார்.

நினைத்த காரியத்தை நினைத்த மாத்திரத்தில் சேர் இராமநாதன் அவர்கள் செய்து முடிப்பாராம். "அப்படி வாய்ப்புக்களும் அமைந்திருந்தன. நாவசைந்தால் போதும், அவரிட்ட பணியை நிறைவேற்ற நான் முந்தி நீமுந்தியென்று ஆட்கள் நிற்பர்" என்று கூறிய திரு சங்கரப்பிள்ளை அவர்கள். கொழும்பில் நடந்த ஒரு சம்பவம்பற்றிக் கூறினார். "கொழும்புவாழ் தமிழ்ப்பலர்சேர்ந்து சேர் இராமநாதன் அவர்களைச் சந்தித்து தமது பிள்ளைகள் சமய, கலாசாரத்தோடு ஒட்டிக் கல்விபெறுவதில் உள்ள கஷ்டங்களை எடுத்து விளக்கினர். சிலநாளில் கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய வீதியிலேயே பாடசாலையொன்று எழுந்தது. அந்தப் பாடசாலையை நடத்த சைவப்பெரியார் சேர சிவபாதசுந்தரம் நியமிக்கப்பெற்றார். ஆனால் பெற்றோர் முன்வர காட்டிய அனுக்குப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபின் அக்கறை காட்டாதுபோகவே அப்பாடசாலையைத் தகர்க்க உத்தரவிட்டார் துரைமவர்கள். அப்படி நினைத்ததை நினைத்த மாத்திரத்தே அவர் செய்து முடிப்பவர்' என்று சொன்னார்.

பரமேஸ்வராக்கல்லூரியும் கலைக்கழகச் சிந்தனையடிப்படையிலேயே உருப்பெற்றது என அவர் சொன்னார். இப்போதிருக்கும் கட்டட வேலைகள் யாவும் தமது மேற்பார்வையிலேயே நடைபெற்றதாகவும் ஆரம்பத்தில் எம். யூ. மூர், எவ் ஜி பியரிஸ் முதலிய ஆங்கிலேயர்கள் இக்கல்லூரி அதிபர்களாயிருந்ததாயும் திரு பியரிஸ் காலத்தில் பரமேஸ்வரக் கல்லூரிக் கட்டிட விஸ்தரிப்பு நடைபெற இருந்ததாகவும், எனினும் பல்துறை ஈடுபாடுகளின் காரணமாக சேர் இராமநாதன் அவர்கள் இதில் போதிய கவனமெடுக்காது விட்டதாகவும் தெரிவித்த திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகம் அமைவதற்கு சேர். இராமநாதன் ஆற்றிய சேவை தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

திரு சங்கரப்பிள்ளை அவர்கள் இராமநாத வள்ளலைச் சந்தித்ததும் உத்தியோகம் பெற்றதும் வேடிக்கையான-சுவைமிக்க-ஒரு தனிக்கதை. யாரும் அதுபற்றி திரு சங்கரப்பிள்ளை சொல்வதைக் கேட்போம்!

கொழும்பிலிருந்து வரும் ஆசிரியர் ஒருவரை அழைத்துச் செல்வதற்காக நான் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் காத்து நின்றேன். ரயில்வர இன்னும் சில நேரமிருக்கிறது. ஆனால் அதற்கு முன்னதாகவே ரயில் நிலையமெங்கும் நிசப்தத்துடன் கூடிய ஆரவாரம். நிலவுகிறது. மிக்க பயத்துடன் ஊழியர்கள் சுறுசுறுப்புடன் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அங்கு நிற்பவர்களும் ஒருவித 'பயத்துடன்' காணப்படுகின்றனர். இந்த அசாதாரண நிலைபற்றி விசாரித்ததில் கொழும்பு ரயிலில் இராமநாதன் துரை வருகிறார் எனச் சொல்லினர். அதே ரயிலில் வரும் ஆசிரியரைத்தான் நானும் எதிர்பார்த்து நிற்கின்றேன்.

மேடையருகே ரயில்வந்து நின்றது. கூடி நின்றவர்கள் எல்லோருமே விலகி நின்று பார்க்கின்றனர். நான்மட்டும் இன்னும் ரயிலை நெருங்கி நின்று பார்த்துக்கொண்டு நிற்கிறேன். விசேஷ பெட்டியொன்றில் கம்பீரமாக இருந்தபடி புத்தகத்தினுள் விழிகளைப் புதைத்திருந்த வள்ளலவர்கள் தலையை நிமிர்த்தி என்னைப் பார்க்கிறார் "வட் டூ யூ வாண்ட்" (உனக்கு என்ன வேணும்) என்று என்னைக் கேட்கிறார் உடனே நான், தங்களிடம் கிளார்க் வேலை இருப்பதாகக் கேள்விப்பட்டேன் அதுதான்... என்றிழுத்ததும் 'கெற் இன்' (உள்ளே ஏறு) என்கிறார் ஏறிக்கொண்டேன் (இளைஞனான நான் அப்போது வர்த்தகபாடம் படித்து மர்மிகேறாம் இன்ஸ்டிடியூட் ஒவ் கொமேர்ஸ் அளித்த சான்றுப் பத்திரமும் பெற்றிருந்தேன்).

துரை இருந்த அதே பெட்டியினுள் நான் ஏறிக்கொண்டதும் பிரயாணத்துக்கு டிக்கட் வாங்கிக்கொண்டாயா என்று என்னிடம் அவர் கேட்டார் 'இல்லை' யென்றேன் உடனே அவர் 'கெற்டவுண்' வெளியே இறங்கு) எனச் சொன்னார் 'ஐயா, எல்லாருமே தங்களைப் பெரிய மனிதன் எனச் சொல்கிறார்களே. தாங்கள் என்னை ரயிலில் ஏறச் சொல்லிவிட்டு உடனேயே இறங்கச் சொல்கிறீர்களே என்றேன், நான். உடனே அவர் ரயில் நிலைய அதிகாரியைக் கூப்பிட்டு, எனக்கு ஒரு டிக்கட் கொண்டுவந்து கொடுக்கும்படி சொன்னார் எனக்கு டிக்கட் கிடைத்தது

சுன்னாகத்தில் துரை இறங்குகிறார் அங்கு ஆளணிகளையும் எடுபிடிகளையும் வியக்க முடியாத குதிரைவண்டி காத்து நிற்கிறது நிசப்தம் எல்லாரும் கிலிகொண்டவர்களாகப் பதறிக்கொண்டிருக்கின்றனர் அந்தச் சூழ்நிலை என் நெஞ்சத்திலும் ஒருவித பயத்தை ஏற்படுத்தவே, நான் சற்றுத்தள்ளி ஒதுங்கிக்கொள்கின்றேன்

துரை வண்டியில் ஏறிக்கொண்டதும் ஆசனத்தின் முன்பாக பார்வை ஓடிவரைத் தேடுகிறார் "என்னுடைய கிளார்க் வந்தார், எங்கே" என்று கனைவும் சப்தம் என் காதில் விழுகிறது ஒரு பணியாள் விரைந்து என்னிடம் வந்து துரையுடன் வந்த கிளார்க் நீங்கள்தானா என்கிறார் அப்பொழுதுதான் துரை என்னைத்தான் தேடுகின்றார் என்று மகிழ்ந்துகொண்டு பயத்துடன் அவரிடம் செல்கிறேன் கிளார்க் என்ற பதத்தைதான் அப்

(12-ம் பக்கம் பார்க்க)

# கணவரைப் பேணும் உத்தமி உலகைப் பேணுகிருள்

இல்லற மகிமையைச் செவ்வனே அறிய வேண்டுமாஞல், அதன் ஒவ்வொரு பகுதியையும் நாம் ஆராய்ந்துணரல் வேண்டும். மனைவியின் முதற்கடமை கணவரைப்பேணல், இரண்டாவது கடமை மக்களைப்பேணல். கணவரைப் பேணல் மாதர்களின் முதற்கடமை என்று கூறும் போது தற்காலப் பெண்களுக்கு வெறுப்பு உண்டாகக் கூடும். அவ்வாறு அவர்களுக்கு வெறுப்புண்டாவதற்குக் காரணம் கணவரைப் பேணல் என்னும் சொற்றொடரின் உண்மை பொருளே அறியாமையாகும்.

### எது கடமை?

கணவனுக்கு சதா அடங்கி நடப்பதும் அவனுக்கு மகிழ்ச்சி யூட்டுவதும், இன்பமாகவிருக்கச் செய்வதும் பெண்ணின் கடமை என்று எண்ணுவது முட்டாள் தனமாகும். குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும் சமூகமும் தேசமும் முன்னேற்றமடைவதற்கும் அல்லும் பகலும் உழைக்கும் ஒரு புருஷனைப் பேணுவது அவனது மனைவி கடமையல்லவா? அத்தகைய புருஷனைப் பேணுவதைப் பெண்கள் ஒரு பெருமையாக மதியார்களா?

### கணவனுக்கு ஊழியம் செய்தால் ...

உலக முன்னேற்றத்திற்காக உழைக்கும் மகாத்மா காந்தியைப் பேணிய கஸ்தூரிபாய் தேவி, மறைமுகமாக உலகத்தையும் பேணவில்லையா? ஒரு உத்தம கணவனுக்கு ஊழியம் செய்யும் மனைவி மறைமுகமாக உலகிற்கே ஊழியம் செய்கிருள் என்பதை யாவரும் மனதில் பதிக்க வேண்டும்.

### உத்தம மாதர்

ஹாக்கர் என்பவர் ஒரு நாள் தன் நண்பர்களோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் சொல்லிவிட்டு நித்த குழந்தை எழுந்து கண்டு கோபம் கொண்ட மனைவி தொட்டிலை ஆட்டும்படி கணவனுக்குக் கட்டளையிட்டதாகவும், உடனே ஹாக்கர் தன் நண்பர்களை அனுப்பிவிட்டுத் தொட்டிலை ஆட்டியதாகவும். ஒரு கதையுண்டு அத்தகைய மாதரை நாம் உத்தம மாதராகக் கருதக் கூடாது. உத்தம மாதர்களைக் காண விரும்புவோர் புராண காலங்களிலும், சரித்திர காலங்களிலும் வாழ்ந்த வீர பத்தினிகளை ஞாபகத்திற் கொண்டு வரவேண்டும்.

### சவ்வரிசிக் கேக்

**தேவையான பொருட்கள்**

சவ்வரிசி - 1 ஒருத்தல்.
சீனி - 3/4 „
நெய் - 1/2 „
முந்திரிகை
வற்றல் - 1/4 „
சுக்கொல்லை-1/4 ரூ.

**செய்முறை**

முதலில் சவ்வரிசையை அரைமணி நேரம் ஊற வைத்து ஆட்டுக்கல்லில் போட்டு அரைத்தெடுத்துக் கொள்ளவும். பின் அடுப்பில் எண்ணெய்ச்சட்டியை வைத்து நெய் ஊற்றி முந்திரிகைவற்றல், சுக்கொல்லை ஆகியவற்றை வறுத்தெடுத்துக் கொள்ளவும். சீனியைப்பாகு காய்ச்சி அதனுள் அரைத்து வைத்த சவ்வரிசியை ஊற்றி நெய்விட்டு இடைவிடாது கிளறவேண்டும். பின்னர் கேசரிப்பவுடர் வறுத்து வைத்த முந்திரிகை வற்றல், சுக்கொல்லை ஆகியவற்றைப்போட்டு இறக்கியதும் ஒரு தட்டில் ஊற்றி ஆறியதும் வெட்டிப்பரிமாறலாம்.




தயாரிப்பு குணம்

## சைவ இறைச்சி

தயிரிலிருந்து இறைச்சியின் பண்புள்ள மிகு புரத உணவுப் பொருள் ஒன்றை அமெரிக்க வேளாண்மைத் துறை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். நெடுநேரம் சூடுபடுத்தினாலும் இது கரைந்து துண்டாகி விடுவதில்லை. பிடித்தமான மணம், காரம் முதலியன சேர்த்து உண்ணலாம்.

குறிப்பாக வளர்ச்சிக்குறைவான நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் பால்குடிப்பதில்லை. அவர்கள் இந்தப் புதிய தயிர்ப்பண்டத்தைத் துணை உணவாக உண்டு, தம் சாப்பாட்டிலுள்ள ஊட்டச் சத்துக் குறைவுகளை நிறைசெய்துகொள்ளக்கூடும்.

தயிரில் ஏராளமான புரதச் சத்து உண்டு.

வாஷிங்டன் நகரிலுள்ள வேளாண்மைத் துறையின் ஊட்டச்சத்து ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த நோபின் பி. வாகி, ஒலன் டபிள்யூ. மார்க்ஸ் என்னும் இரு இரசாயன வல்லுநர்கள் புதிய தயிர் உணவை உருவாக்கியவர்கள். ஏடு எடுத்த பாலோடு "கால்சியம் குளோரைடு சேர்த்து, தயிர் தயாரித்துப் பின்பு அதைச் சூடுபடுத்துகிருர்கள்; அடுத்துச் சிறுசிறு துண்டுகளாக அதை வெட்டி, கொதிக்கும் எண்ணெயில் அதை வறுக்கிருர்கள். சற்று பழுப்பு நிறம் வந்ததும் எடுத்துவிடலாம்.

வறுத்த தயிரைத் தண்ணீரில் போட்டு, குளிர் பெட்டியில் இருவாரங்கள்வரையில் கெடாமல் வைத்திருக்கலாம். உரிய உப்புப்பொடி சேர்த்து, வீட்டு வெப்பநிலையில், மூன்று மாதம் வரையில் கூடக் கெடாமல் வைத்திருக்கலாம். வறு தயிரைப் பயன்படுத்தி, இறைச்சி மணமுள்ள குழம்பு தயாரித்து, டப்பாக்களில் அடைத்து வைக்கலாம். சொதிப்பும் பண்டங்கள் செய்யலாம். இனிப்புப் பண்டங்களும் செய்யலாம்.

## கோபமுள்ள இடத்தில்..

நீ சொல்லுவதைத்தெல்லாம் அது எதுவானாலும் சிலர் "ஆம்! சரி! அப்படியே!" என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அவர்களை நீ நம்பிவிடாதே. அவர்களிடம் வெகு ஜாக்கிரதையாகப் பழகு. உன்னை ஆட்சேபித்துப் பேசி உன்னுடன் தர்க்கிக்கிறவனை நீ நம்பு. அவனுல் பல நன்மைகள் ஏற்படும். எப்பொழுதும் கோபமுள்ள இடத்தில் குணமும் உண்டு.

# கங்கைக்கரையில்...

நூரத்தே காட்டுக்குள்ளே நெய்தல் மறைகைன் ஜோடி இணைந்து வானவீதியில் காணம்பாடிச் சென்றன. அந்தக் கானம் புராண காலத்து நினைப்புனைத்துக்கு என்னை ஒருகணம் இழுத்துச் சென்றது. முருகனும் வள்ளியும் இதேபோல் எத்தனை இரவுகளை இக்காட்டாற்றங்கரையில் இனிதாக கழித்திருப்பார்களோ. கங்கைக் கரை என்ன தவம் செய்ததோ அவர்தம் நீர்விளையாடலும் களிப்பெருவகையும் கண்டு களிக்க அந்தநாள் அவ்வெள்ளிலவில் கங்கையில் வீழ்ந்துமறைந்து ஒருவரையொருவர் பிடிப்பதற்கு நீச்சலடித்து களிவோடித் துரத்தியிருப்பார்கள். வள்ளி முருகனிடம் அகப்படுக்கொள்ளாமலே கரைக்கு விரைந்து ஒரு மரத்தின் அடிவேரில் ஏறி நின்று முருகனைப்பார்த்து கலகலவென்று நகைத்திருப்பாள். அவளுடைய சிரிப்பொலி அப்பொழுது இந்த வனப்பிரதேசமெங்கும் எதிரொலித்திருக்கும்...

நதியாயும் சலசல ஓசையைத் தவிர எங்கும் ஆழ்ந்த அமைதி.

### தமிழும் முருகனும்

முருகனே தமிழ்; தமிழே முருகன் எனத் தமிழ்ப்பெருமக்கள் வணங்கும்போது தமிழ்த்தெய்வம் முருகனே என்பது ஐயமற்றதாகிவிடுகிறது. முருகன் என்றசொல்லுக்கு அந்த உயர்வு தமிழ் சொல்லுக்கு அழகு, இளமை வெற்றி என்றும்பல்பொருள் உணர்தலின் தமிழே தெய்வமான நெடுவேல் குமரன் வடிவேல்குமரனும் அழகு தெய்வமுமாகவே நின்று நமக்கு அருள்பாலித்து வருகிறான் என்போம்.

## ஜீவபூமி

அதோ நதியில் ஒரு படகு- அன்னப்படகு. கங்கையின் பாய்ச்சலுக்கு எதிராக நீரைக் கிழித்துச்செல்கிறது: படகில் இருப்பவர் கள் யார்? ஓர் ஆடவனும் மங்கையும். அவன் காளை. அவள் கன்னி. காளையின் கையில் வேலிருக்கிறது கன்னியின் விழியில் அவ்வேலின் கூர்மை இருக்கிறது. நான் நோக்க மெல்ல நகும் அக்விழி நோக்கிலும் குறு நகையிலும் வேலும் வாளும் வியவளாக கங்கை நீரைக் கைகளால் அள்ளி எற்றி வாய் கொள்ளாச் சிரிப்பொலியும் எழ அக்காளையைக் குளிக்குதாவித்திருப்பவள்... ஆம், முருகனும் வள்ளியும்.

அன்னப்படகுவாயுவேகம் மனோவேகமாகச் செல்கிறது. கங்கையில் மிதந்து செல்கிறதா அல்லது கங்கை மேலாகப் பறக்கிறதா? என்ன அதிசயம், படகில் இப்பொழுதும்யானுமல்லோ அமர்ந்திருக்கிறேன்' கங்கை ஊற்றெடுக்கு மதுங்குவிக் குன்றம் கண்ணெதிரே தோற்றப்படுகிறது. நம்மைச்சுமந்துசெல்லும் அன்னச்சவாரி படகு ஆங்கு அக்குன்றம் மேல்மெல்லப் படியுமா, வானத்திலேயே திசைதிப்போமா? குன்றுருவ வேல் விடுத்த குமரா, குன்றமெறிந்த குமரேசா, சரணம்... சரணம் ....

ஆம், கங்கை ஜனித்த வெண்ணிலா அதுபோழ்து ஆங்கு சிதறிய மாணிக்கக் கதிரொளியில் நதிதீரம் அப்படி எழிற்கொழித்துக் கிடக்கிறது. அவ்வற்புதசௌந்தர்ய சோபிதத்தில் இறங்கி இப்போகும் நம் மனத்தைத்தே அதக்குணம் இவ்வகைத்தாய் எவ்வளவோ கனவுகள்!

அழகுறையும் அந்த அழகர் சந்நிதியிலே ஆங்கு ஒரு பொழுதில் இப்படி எவ்வளவோ எண்ணப்பிரவைகள்!

### கதிரமலைக் கடவுள்!

சமயகோடிகளெல்லாம் "தன்தெய்வம்", "என்தெய்வம்" என்று எங்கும்தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றதெது? என்பது தாயுமானவரின் அருள்வாக்கு. எந்தத் தெய்வத்தைக் குறித்து சமயங்கள் அவ்விதம் 'என்தெய்வம்', "என்தெய்வம்" என்று போட்டியிட்டன?

"வேறெந்தத் தெய்வமுமல்ல; தமிழ் தெய்வம் தான் அது" என்று அமரர் 'கல்கி' ஒருசமயம் இலங்கை வந்திருந்தபோது தமிழின் உயர்வுபோற்றி மொழி வளர்க்கும் தமிழ்க்கழகத்தாருக்கு விடுத்த ஓர் ஆசியுரையில் குறிப்பிட்டார். 'தாயுமானவரின் கருத்து எதுவாயிருந்தாலும் அவர் கூறியது தமிழ்த் தெய்வத்துக்கு நன்கு பொருந்துகிறது' என்றார் 'கல்கி'யார்.

கதிர்காமக்கடவுளின் நிலைமைகூட இவ்விதமான உரிமைப்போட்டிக்கு இடமாகத்தானே ஆகியிருக்கிறது?

பௌத்த சிங்களர் ஆங்கு கோவில்கொண்ட கார்த்திகேயனும் வள்ளிதெய்வானையும் தம் தெய்வங்களே என உரிமைக்கொண்டாடி வழிபட்டுவருகின்றனர். ஆங்கு சுவாமிக்குப் பூஜை செய்வோர் தாம் பண்டைநாள் தம்பிரசன்னம்சா வழிவந்தோர் எனக்கூறி அதில் பெருமை கொள்ளர்.

இவரேபோல் சிவசைவ மதத்தினரான தமிழ்ப் பெருங்குடிமக்களும் தமிழ்கூறு நல்லுலகெங்குமிருந்து ஆங்கு திரண்டு சென்று ஒளவையும் கீரனும் அருணகிரியும் கச்சியப்பரும் கண்டு மகிழ்ந்து குளாவியமுருகனை, அவன் அருளைக் கங்கைக்கரையிலும் காட்டிலும் மலையிலும் குன்றின் மேலிட்ட தீபத்திலும் இன்றும் எங்கெல்லாமோ கண்டு கரங்குவித்து சிரந்தாழ்த்தி வருகின்றனர். ஆடி மகோற்சவ வேளாளைத்தில் இவ்விருசாராருடனே மறுபாலாரும்-இஸ்லாம்மதத்தவரும், கிறிஸ்தவ மதத்தவரும் கலந்துகொண்டு முருகனுக்கு வழிபாடியற்றுவர்.

இவ்விதமாகத் தமிழ்த் தெய்வத்துக்கு அடுத்தபடி சமயகோடிகளெல்லாம் 'தன் தெய்வம்' என் தெய்வம் என்று தொழுதேத்தவும் (எதிர்வழக்கிடவும் கூடத்தான்) நின்ற அதே கடுள் தெய்வமாகக் கண்முன்னே காணும் கலியுகதெய்வமாக தென்மலைக்காட்டிலே காந்துறையும் கதிரமலைக் கடவுளின் மகிமையைஎன்னென்று சொல்வோம், ஏதென்று சொல்வோம், ஏதென்று எடுத்துரைப்போம்.

அ. செ. மு.

# ...கார்த்திகைத்தீபம்-3

## மிளகாய் நாற்றுகள்

இனம்: கொ இலுப்பள்ளம (சுத்த இனம்)

தெரிந்து எடுக்கப்பட்ட மிளகாய்ப் பழங்களின் விதையில் இருந்து உண்டாக்கிய நாற்றுக்கள்.

இவை கிருமிநாசினிகளால் நோய்களில் இருந்து அகற்றப்பட்டவை.

விலை 100 கன்றுகள் ரூபா ஒன்று (ரூபா 1/-)

கிடைக்குமிடம்: விதை கமம் (SEED FARM)

116 1/4 கடை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

# செவ்வாய்க் கிரகத்தில்...

அமெரிக்கா அனுப்பிய மரினர்-9 என்ற விண்கலம் செவ்வாயைச் சுற்றி வலம் வந்துகொண்டிருக்கிறது என்ற செய்தியும், ரஷ்யா அனுப்பிய மார்ஸ்-II, மார்ஸ்-III என்னும் கலங்கள் செவ்வாயைச் சமீபிக்கின்றனவென்றும் அவற்றில் ஒன்றாவது இறங்கக்கூடும் என்ற செய்தியும் நமக்கு சுமார் 5 கோடி மைல்களுக்கப்பாலிருக்கும் நமது சகோதர கிரகமாகிய செவ்வாய் மீது உலகத்தவரின் கவனத்தைத் தூண்டுகின்றன.

சூரிய மண்டலத்துக்கப்பாலுள்ள வேறு கோள்களிலும் உயிரினம் இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவென்பதற்கு அத்தாட்சியாக, சென்றவாரம் இரு அமெரிக்க விஞ்ஞானிகள், நீரில் இல்லாமல், வான வெளியில் காணப்படும் இதர வாயுக்களைக் கொண்டே உயிரினங்களை உற்பத்தியாக்க முடியுமென்று நிரூபித்திருக்கின்றனர். நீரில் இல்லாத கோளங்களிலேயே உயிரினம் உற்பத்தியாக முடியுமென்றால், நீர் இருக்கிறதெனக் கருதப்படும் செவ்வாயில் ஏதாவதொருவகை உயிர் இருக்கத்தான் வேண்டும் என்றாகிறது. ஆனால் இவ்வுயிர்கள் ஆறறிவு படைத்த மனிதனை ஒத்தவையா அல்லது அவனுக்கும் குறைந்தவையா, கூடியவையா என்பதுதான் இனிமேல் கண்டுபிடிக்கவேண்டிய விஷயம்.

1877-ம் ஆண்டில் ஜோவானி ஷியாப்பறலி என்ற இத்தாலியவிஞ்ஞானி தனது தூரப்பார்வைக் கண்ணாடியால் பார்த்தபோது செவ்வாய்க் கிரகத்தில் நீளமான பெரிய கோடுகள் இருப்பதைக் கண்டுபிடித்தார். பின்னர் அமெரிக்க விஞ்ஞானி பேர்சிவல் லோவல் இதை ஆமோதித்து அந்தக் கோடுகள் விவசாயம் செய்வதற்காக அறிவுள்ள பிராணிகளால் ஆக்கப்பட்ட வாய்க்கால்களாயிருக்குமோ என்று சந்தேகித்தார். இந்த வாய்க்கால்கள் செயற்கையால் ஏற்பட்டவை அல்லவென்பதை இன்றைய விஞ்ஞானிகள் பொதுவாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் அவை என்ன? நிரையாக பல மைல் தூரங்களுக்கு வளர்ந்திருக்கும் ஒரு வகைத் தாவரவர்க்கமாயிருக்குமோ என்று சிலர் சந்தேகிக்கிறார்கள்.

**வி. என். பி.**

பூமியில் உள்ளது போல உயிர்வகைகள் செவ்வாயிலும் இருப்பதற்கு என்ன விதமான சான்றுகள் வேண்டும்? சூரிய மண்டலத்தில் புதனுக்கும், வெள்ளிக்கும் அடுத்தாற்போல சூரியனுக்கு மிகவும் அண்மையானது நமது பூமி. இதற்கடுத்தது செவ்வாய்க் கிரகம். ஆகையால் பூமியில் விழும் சூரிய உஷ்ணத்தை விட குறைவான உஷ்ணமே செவ்வாயில் விழுகின்றது. பூமியைவிட செவ்வாய் குளிர் கூடியதும் பனிப்பிரதேசங்கள் நிறைந்ததுமாயிருக்க வேண்டும். பூமியில் வட துருவப் பகுதிகளிலும் மிருகங்களும், பறவைகளும், மனிதர்களும்வசிக்கிறார்கள் ஆகையால் செவ்வாயிலும் இப்பேர்ப்பட்ட பிராணிகள் வசிக்கக் கூடும்.

செவ்வாய் பூமியைவிடச் சிறியது. அதன் குறுக்களவு ஆக 4,200 மைல்களாகும். பூமியின் எடையில் ஒன்பதில் ஒரு பங்குதான் செவ்வாயின் எடை. ஆகவே அங்குள்ள ஆகர்ஷண சக்தி பூமியிலுள்ளதில் மூன்றில் ஒரு பங்கு.

ஆதாவது பூமியில் நூறு றாத்தல் எடையுள்ளவர் செவ்வாயில் 33 1/3 றாத்தலே யிருப்பார். இங்கே மூன்றடி உயரம் பாயும் சிறுவன் அங்கே கிட்டத்தட்ட பத்தடி பாய்வான். மனிதரைப் போல பிறவிகள் செவ்வாயில் இருக்குமானால் அவை மனிதரைவிட மிகவும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், அதன் பலனாக நாகரிக வளர்ச்சியிலும் மனிதரை விட உயர்ந்தவர்களாயும் இருக்கக் கூடும்.

அப்படி இருக்கும்பட்சத்தில், நாம் சந்திரனையும் செவ்வாயையும் அறிவதற்கு முயலுவதுபோல, செவ்வாயிலுள்ள பிறவிகளும் அருகிலுள்ள இந்த பூமியைச் சுற்றிப் பார்த்து அதை

# ...உயிரினம் உண்டா?

அறிந்துகொள்ள முயலுவார்களல்லவா? அப்படி ஏன் முயலவில்லை? யார் சொன்னது முயலவில்லை என்று? பூமியிலே சமீப காலங்களில் அடிக்கடி தோற்றப்படும் பறக்கும் தட்டுகள் அல்லது 'அடையாளம் தெரியாத பறக்கும் பொருள்கள்' எங்கிருந்து வருபவை, யாரால் அனுப்பப்படுபவை, எங்கே திரும்புகிறவை? செவ்வாய்க் கிரகத்திலுள்ளோரால் அனுப்பப்பட்டவையாயிருக்கப் படாதா? இப்படிச் சிலர் வாதாடக்கூடும். ஆனால் இந்த பறக்கும் தட்டுகள் அடிக்கடி தோன்றி மறைவதாக செய்திகள் வந்திருக்கின்றனவேயன்றி, அவற்றிலிருந்து யாராவது இறங்கி பூமியில் காலடி வைத்ததாகவோ, மனிதரோடு சம்பாஷித்ததாகவோ தெரியவில்லை. பறக்கும் தட்டுகள் உண்மையானவைதானா அல்லது சிலருக்குத் தோற்றப்படும் ஒருவகைப் பார்வை மயக்கமா என்று இன்னமும் நிபுணர்களால் தீர்மானிக்கப்படவில்லை.

சூரிய மண்டலத்துக்கு அப்பாலுள்ள அண்ட வெளியில் சூரியனைப் போன்ற பல நட்சத்திரங்கள் இருப்பதும், அந்தச் சூரியன்களைச் சுற்றிக் கோளங்கள் சுழலுவதும், அவற்றுள் ஒன்றில் மனிதரைப்போல அறிவுள்ள உயிர்கள் (அல்லது மனிதரைவிட முன்னேற்றமான உயிர்கள்) இருக்கக்கூடுமென்பதும் இன்று பலராலும் ஒப்புக்கொள்ளப்படும் உண்மை. மனிதரைவிட முன்னேறிய உயிர்வகை இக்கோள்களில் இருந்தும் அவை (எம்மைப் போல) விண்கலங்களை பூமிக்கு அனுப்பாமலிருப்பதற்கு ஏதாவதொரு காரணம் இருந்தால், அது பேர்னாட் ஷோ சொன்னதாய்த்தானிருக்கவேண்டும். 'அண்ட வெளியில் வசிப்பவர்கள் இந்தப்பூமியை ஒருவிசர் ஆஸ்பத்திரி என்று நினைத்து அதை தீண்டாமல் விட்டுவிட்டார்கள்' என்பதுதான் ஷோவின் கருத்து.

இது எப்படியாயினும், செவ்வாயில் பூமியைப் போன்ற உயிர்கள் வாழ்வதற்கேற்ற வாய்ப்புகள் இருக்கின்றன என்பது நிச்சயம். ஆறறிவு படைத்த உயிர்கள் வசிக்கின்றனவா என்றகேள்விக்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் தற்சமயம் மேற்கொண்டுள்ள செவ்வாய் ஆராய்ச்சிகள் மறுமொழி தருமா?

மினிக்கதை

## ★ ஓசிப் பிரயாணி

பஸ்ஸில் சரியான நெருக்கம். பெண்கள் உட்பட ஏராளமானோர் கைபிடியில் தொங்கிக் கொண்டிருந்தனர் வெளியில் மழை இலேசாகப் பெய்து கொண்டிருந்ததால் கண்ணாடிகள் பூட்டப்பட்டிருந்தன. உள்ளே காற்றோட்டமே இல்லை. ஆமைவேகத்தில் வந்து கொண்டிருந்தது.

கோப்பாய்ச் சந்தியில் பஸ்ஸில் எக்கச்சக்கமான கூட்டம். கண்டக்டர் பின்கதவில் தொங்கிக் கொண்டிருந்தார். சிலர் முன்கதவாலும் ஏற முயற்சித்தபோது சாரதி தடுத்து விட்டார். பின்கதவால் டிக்கட்பெற்று ஒவ்வொருவராக ஏறுகிறார்கள். கண்டக்டர் மணியை அடிக்கிறார். பஸ் மிகவும் கஷ்டப்பட்டுப் புறப்படுகிறது. கண்டக்டர் முன்பக்கத்தை எட்டி எட்டிப் பார்க்கிறார்.

"முன்னுக்கு டிக்கட் இல்லாமல் யாரும் இருக்கிறீர்களா?— ஒருவர் இருக்கிறார்" ஒரு பிரயாணியின் குரல். கண்டக்டர் கோபத்துடன் "யாரது?" என்கிறார். "டிரைவர் இருக்கிறாரே" என்றது அதே பிரயாணியின் குரல்.

— யோகி.

# சிறுகதை போராடப்பிறந்தவர்கள்

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

போடுகிறாள். அவள் நிமிர்ந்தபோது வழக்கம்போல் குழந்தைகள் இருவருக்கும் பாலை எடுத்துக்கொடுக்கிறாள் வாசுகி. அவள் கரங்கள் மனத்துடன்சேர்ந்து நடுங்குகின்றன. குழந்தைகளுடன் சேர்ந்து தானும் பருகியவாசுகி உள்ளம் வெடிக்க தான் பெற்ற குழந்தைகளை முத்தமிடுகிறாள்.

"ரோஜா...உங்க அப்பா ரொம்பக் கஷ்டப்படுகிறார். அவராவது சந்தோஷமாக வாழட்டும்."

"அம்மா...!"

"ராஜா, அம்மாவும் இன்று உங்களுடனே படுத்துக் கொள்கிறேன்!" வாசுகி ராஜாவை அணைத்துக்கொள்கிறாள்.

இரு குழந்தைகளின் தாங்கலின் உதவியுடன் பாயில் படுத்துக்கொள்கிறாள் வாசுகி. இரு பக்கலிலும் அவள் பெற்ற செல்வங்கள் அவளை இறுக அணைத்துக் கொள்கின்றன. பாவிக்

அவள் கலந்துவிட்ட அளவு மீறிய தூக்கமாத்திரை குழந்தைகளை அயரவைக்கின்றன. அவள் நிம்மதியாக உறங்கும் தன் கணவனைப் பார்க்கிறாள். முடிவில் வானத்தில் இறைவனைத் தேடுகிறாள். அவள் மனம் மெல்ல மெல்ல அமைதியடைகிறது. வெளியே வானம் வெளிக்க ஆரம்பிக்கிறது. விழிகள் அமைதியாக மூடிக்கொள்கின்றன. இதுவரை காணாத சுகம் அவளை எங்கோ இழுத்துச்செல்கிறது.

(யாவும் கற்பனை)

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர். அன்னைக் கடை எடுப்பதிலுள்ள மலர்ச்சி தெரிந்தது. எல்லாரும் நம்பிக்கையோடு நின்றார்கள். அவருடைய மனைவி பாக்கியலெட்சுமி கூட தானோடு நின்றிருந்தாள். இன்னொரு உழைப்பாளி தனது குடும்பத்தில் வரப்போகிறான் என்ற நினைவின் இனிமை

போடு ஐயாத்துரை பேசினார்.

'எவ்வளவு வாடகையாம்... பரமுவின் மாமன் என்கிறாய்.. பரமுவைப்போலத்தான் இருக்கும்...'

'மாதம் ஐம்பது ரூபா வாடகை... தளபாடங்களை எல்லாம் அப்படியே விலை போட்டுத்தருகிறாம்... நான் கொஞ்சம் நெருக்கிப்பிடித்தால் வாடகையில் ஐஞ்சுபத்தைக் குறைக்கலாம்... ஆனா...'

மயில்வாகனம் இழுத்தார். 'ஆனா' என்ற அந்த இழுவை எல்லாரது நெஞ்சிலும் கூரிய வலியாக ஏறியது.

'என்ன...?'

'கடைக்கு இனாமா ஆயிரம் கேட்கிறார்...'

சில கணங்கள் நீண்ட மௌனம் அங்கு நிலவியது. சில பொழுதுக்குமுன் எல்லாரது முகத்திலும் நிலவிய நம்பிக்கையும் மகிழ்வும் திடீரென மறைந்தன. மகேஸ்வரி பெருமூச்சு விட்டாள். துரைராசா தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

'நாளைக்கு முடிவு சொல்கிறேன்...' என்றார் ஐயாத்துரை.

மயில்வாகனம் போனதன் பிறகு ஐயாத்துரை பலவாறு சிந்தனை செய்துபார்த்தார். துரைராசா கடை தொடங்குவது என்றால் குறைந்தது நாலாயிரம் ரூபாவாவது தேவை? நான்கு ரூபாவிற்கு இப்போது வசதியில்லாத அவர் நாலாயிரத்திற்கு எங்கை போவார். பாக்கியலக்சுமி அதற்கு வழி கூறினாள். மகனுக்குச் சொல்லுவதுபோல அவருக்குக் கூறினாள்.

'காணியை ஈடுவைச்சுக் கொள்ளடா... துரைராசா! நீ உழைச்சு மீளலாம்......'

அந்த இரண்டு பரப்புக் காணிதானுண்டு அவருக்குள்ள ஒரே சொத்து. துரைராசா சத்தியம் செய்து கொடுத்தான்.

'நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. அப்பு! நான் காணியை ஈடு மீளுவன்... மாதம் மாதம் மிச்சம் பிடித்துச் சுலபமாக மீண்டுவிடலாம்...' வார்த்தைகள் அழகானவை, கேட்பதற்கு இனிமையானவை, எவ்வளவு கஷ்டங்களூடே செயல்படுத்தவேண்டிய ஒரு காரியத்தை வார்த்தைகளால் ஒரு கணத்தில் செயல்படுத்திவிடலாம்.

கடைவைத்தாகிவிட்டது. சுப்பையர் எடுத்தார் முதல் நான்கு மாதங்களும் மாதாமாதம் ஒழுங்காகத் துரைராசா வட்டி கட்டிவந்தான் கடந்த இரு மாதங்களாகக் கட்டவில்லை.

'மாதாமாதம் வட்டிகட்டி இருக்கிற கடை முதலைப் பழுதாக்கமுடியாது... மாதாமாதம் கட்ட முடியாது... ஈடுமீளக்கை கட்டலாம்...' என்று கூறிவிட்டான் துரைராசா,

துரைராசாவிற்கு அவையெல்லாம் இப்பொழுது நினைவு இல்லை இப்போது அவனுக்கு ஒரே ஒரு நினைவு தான் விழிகள் ஆஸ்பத்திரி வாசலிலேயே தவங்கிடந்தன 'இன்னமும் காணோமே' என்று அவனது உள்ளம் ஏங்கியது.

இணுவில் கந்தசாமி கோவில் மணி ஒலிகேட்டது துரைராசா ஏக்கத்தோடு நின்றான்.

அவனுடைய கடைக்கு ஒரு வயதான பெண் வந்தாள்

'தம்பி... ...பால் போச்சி இருக்கே...' அனித்தாள் அவள். அவன் இப்போது வியாபாரம் செய்யத் தயாராக இல்லை. அவன் ஆவலோடு எதிர்பார்த்த உருவம் வாசலில் தெரிந்தது. ஏக்கத்தோடு பார்த்தான். அந்த உருவமும் அவனது கடையை நோக்கியே வந்தது.

அவள் அழகாக இருந்தாள். மெல்லிய உயர்ந்த உருவம். கவரக்கூடிய உடலமைப்பு. அவளது விழிகள் சற்றுப் பெரியன. கருவண்டுகள் என சற்று அளவுக்கு மீறி அவை துடித்தன. அத்துடிப்பில் அவன் கரைந்தான்

அவளது உடலை வெண்ணிறச் சேலை ஒன்று தழுவி, 'அவள் அந்த ஆஸ்பத்திரி நர்ஸ்' என்று பறைசாற்றியது.

'ஏன் இந்திரா, இன்று லேற்...?' என்று துரைராசா ஆவலோடு கேட்டான்.

அக்கேள்விக்கு விடை கூறாது, அவள் அவனை ஏறிட்டு நோக்கி, மெல்லத் தன் உதடுகளை மலர்த்தினாள். அந்த ஆண்மகன் மதிமயங்க அது ஒன்றே போதும்.

'இன்று ஒரு சீரியஸான கேஸ்... கொஞ்சம் மினக்கெட்டுப்போச்சுது...' என்றாள் அவள். அவளது கரம் ஒன்று கடை மேசையைப் பற்றி நின்றது. அவன் அவளையே இமைக்க மறந்து பார்த்து நின்றான்.

'தம்பி...வெத்திலை ஒன்று தா...' —திடுக்கிட்டு அவன் திரும்பினான். இணுவில் மயில்வாகனம் சைக்கிளை ஒரு கையில் பற்றியபடி, கடை வாசலில் நின்றிருந்தார்.

'நான் வாறன்...' என்று அவள் விடைபெற்றாள்.

(வளரும்)


## விதை மிளகாய்

இனம்: மகா இலுப்பள்ளம கத்த இனம்
சுத்தம்: 95% முளைத்திறன்: 80%

கிடைக்குமிடம்:-

(1) விதை கமம் (SEED FARM)
116 1/4 கந்தை, கண்டி வீதி, பரந்தன்.

(2) ரோஸ் பிரண்ட் தொழிற்சாலை (ROSE BRAND FACTORY)
உடுவில் ரோட், மானிப்பாய்.

விலை 1 றாத்தல் ரூபா 5|50 சதம்

விவசாய இலாகாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு விதை தயாரிக்கும் கமம். விவசாய இலாகாவினரும் எங்களிடம் விதைமிளகாய் வாங்குகிறார்கள்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள். உபகரணங்கள். ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியரிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3709

அப்பளம் தயாரிப்புக் கேற்ற உழுந்துமா நவீன இயந்திரங்கள் மூலம் அநுபவமிக்க தொழிலாளர்களால் அரைத்து அரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். முகமதி கிரைண்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3754

மலிந்த நவதானியங்களும். கோழித்தீனி வகைகளும் கறுந்தச்சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சின்னத்தம்பி மஹேஸ்வரன் மில், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

## வைத்தியம்

வாதம், இரத்தி. தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D. A. M.) தங்க பாஸ்கரன் வைத்தியசாலை, இராசாவீதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

## வரி விளம்பரம்

மணி மார்க் வரகு அரிசி குரக்கன் மா என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். மொத்தமாக வாங்கி ஏமாறாதீர்கள். P. முத்தையா, வசந்தா இண்டஸ்றீஸ், நாவலடி லேன், யாழ்ப்பாணம். 3706

## கல்வி

Private Tuition - G. C. E (O L) Classes கணிதம், தூய கணிதம், பிரயோககணிதம், ஆங்கிலம் கற்பிப்பதற்கு வகுப்புகள் 3-1-72-இல் ஆரம்பிக்கப்படும். வகுப்புகளில் சேரவிரும்புவோர் 20-12-71க்கு முன் R. திருநாவுக்கரசு இல 4, 4ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 3763

## தேவை

வலாலி வீதியில் - புன்னாலைக்கட்டுவன் அல்லது வசாவிளான் - கலட்டுக்காணிகள் தேவைப்படுகிறது. ஆ. த. ஜெயசிங்கம், 5 முருகேச ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 3777

## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றிய ... திவிங்கம் நடராசா என்பவர் 30-10-71-ல் விலகிக்கொண்டார். இவருடன் செய்து கொள்ளும் கொடுக்கல்வாங்கல் எவற்றுக்கும் நாங்கள் பொறுப்பாளிகளல்ல என்பதைத் தெரியப்படுத்துகிறோம். விஜயா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ். 146, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 8182

## தேவை

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்திற்கு ஓர் பொது முகாமையாளர் தேவை. விபரங்களுக்கு சொந்த விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் நேர்க்காணும் முகவரிக்கு 7-12-71க்கு முன் விண்ணப்பிக்கவும். தலைவர், பச்சிலைப்பள்ளி, ப. நோ. கூ. சங்கம், பளை. 3779

## விற்பனைக்கு

தச்சன்தோப்புச் சந்திக்கு அருகாமையில் இருக்கும் 10 பரப்புக் காணி; புகையிரத நிலையம், தபாற்கந்தோர் மிகக் கிட்ட. விபரங்களுக்கு: 227, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3781

நல்ல நிலைமையில் உள்ள B. S. A. கோல்ட் டம், E L 9000 தொடர்புள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். Jaffna radio electricals. 9 1/5, Hospital road, Jaffna. 3789

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் ஒரு பரப்புக் காணித்துண்டு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஆ. த. ஜெயசிங்கம் 5 முருகேச ஒழுங்கை. நல்லூர் யாழ்ப்பாணம். 3776

## விற்பனைக்கு

மயில்மார்க் சந்தனப் பவுடர் நறுமணம் மிக்க சுத்த சந்தனப்பவுடர். உயர்தர சந்தனக் கட்டைகளிலிருந்து யந்திரங்களினால் தயாரிக்கப்பட்டது. கோவில்களிலும், விழாக்களிலும் தினசரி பாவிக்கவும் உகந்தது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, யாழ்ப்பாணம். 3708

## விற்பனைக்கு

ஒட்டுசுட்டானிலுள்ள நீர்ப்பாசன இலாகா சந்தியில் இருக்கும் ஓர் சில்லறைக் கடைக்கு தகுந்த கடையும் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: லோகராசா ஸ்ரோர்ஸ், ஒட்டுசுட்டான். 3778

4ஸ்ரீ 5000 தொடர்பிலக்கமுடைய B. S. A. பண்ரம் சுப்பர் மோட்டார் சயிக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இல்லர் பாடசாலை, இல. 426, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3775

## புகைவண்டி...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

1825-ம் ஆண்டு மணிக்கொன்றிற்கு 5 மைல் வீதம் ஓடும் இயந்திரத்தைச் செய்து முடித்தார்.

இப்பொழுது அந்நாட்டுப்பணக்கார மக்களின் கவனத்தை ஸ்டீவன்சன் கண்டுபிடிப்பு கவர்ந்தது. அவர்களின் வேண்டுதலின்பேரில் பலர் விரைந்துசெல்லும்யந்திரவண்டிகளைக் கண்டுபிடிப்பதில் முனைந்தனர். ஈற்றில் ஸ்டீவன்சன் "ரொக்கெட்" என்ற மணிக்கு 30 மைல் வேகத்தில் ஓடும் புகைவண்டியைக் கண்டுபிடித்தார்.


லிடோ வெலிங்டன்
(யாழ்ப்பாணம்) திரைகளில்
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30: தினசரி: 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு 10-30

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
கலைச்செல்வி
ஜெயலலிதா



மற்றும்



முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்
நம்பியார்
கீதாஞ்சலி
சோ
நடித்த

வீனஸ் பிக்சர்ஸ்
என் அண்ணன்
(ஈஸ்ட்மென் கலர் சித்திரம்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஆராதனாபுகழ் ராஜேஸ்கன்னா நந்தா நடித்த
த றெயின்
THE TRAIN
[ஹிந்தி ஈஸ்ட்மன்கலர்]

ரணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ் சாவித்திரி நம்பியார் நடித்த
தேவதாஸ்

நாகலஷ்மி சினிமா
கல்முனை
தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜமுனா-காந்தாராவ்
வீரமங்கை
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு 10-30
ZORBA THE GREEK
[வயது வந்தவர்களுக்கு மட்டும்]

சாந்தி சினிமா
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்.ராஜகுமாரி
நடித்த
குலேபகாவலி

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரங்கராவ் வாணிஸ்ரீ
நடித்த
துப்பாக்கியே துணை

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி.ப.2-30
ஜெய்சங்கர் - ஜமுனா
நடித்த
குழந்தையும் தெய்வமும்

வெல்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-சரோஜா தேவி
நடித்த
எங்க வீட்டுப் பிள்ளை

REGAL Jaffna
Daily 5-15, 7 15 p.m.
Sat-Sundays 10-30 a.m.
Kenneth Williams, Sidney James
in
CARRY ON AGAIN DOCTOR
(color)
தினசரி பி. ப 2-00, 10-00
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நாகேஷ்
நடித்த
காதல் வாகனம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
இப்பொழுது வெற்றியுடன் காட்சியளிக்கிறது
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி ★ சாவித்திரி ★ நம்பியார்
★ ரங்கராவ் ★ சந்திரகலா ★ சகுந்தலா
நடித்த
- பிராப்தம் -
தயாரிப்பு—டைரக்ஷன் — சாவித்திரி

## மணிமொழி



குடும்பம், சமூகம், நாடு இவையெல்லாம் அகங்காரத்தின் விரிவே அவை இறைவன் அல்ல. அவற்றுக்காக வேலைசெய்துகொண்டு இறைவனுக்காக வேலைசெய்வதாகச் சொல்லவேண்டுமானால் அப்படி வேலைசெய்யும்படி இறைவனின் ஆதேசம் தாம்பெற்றதையோ இறைவனின் சக்தி தன்னுள் வேலைசெய்வதையோ உணரவேண்டும் இல்லையென்றால் அது நாடு, சமூகம் இவற்றை இறைவனாகப் பாவிக்கும் மனக்கருத்தேயாகும்.

— அரவிந்தர்






## இராமநாத—

11ம் பக்கத் தொடர்ச்சி

பொழுது விளங்கிக்கொள்ள வில்லை அவருடன் வண்டியில் ஏறிக்கொண்டேன் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வைத்து ரயிலில் ஏறுமாறு என்னைப் பணித்த மாத்திரத்தே துரை எனக்கு உத்தியோகம் தந்துவிட்டதை அப்போதுதான் நான் உணர்ந்தேன்"

அன்று துரை அவர்களுடன் சேர்ந்துகொண்டவன் பதினாறு ஆண்டுகளும் அவர் நிழலாகவே இருந்துவந்தேன் இந்தியா உள்ளிட்டு மற்றும் எங்கு சென்றாலும் அவர் என்னையும் அழைத்தே சென்றுவந்தார்.

"வள்ளல் அவர்கள் ஒரு தீர்க்கதரிசியாவர் தமது மரணத்தைப்பற்றி அவர் உறுதியாகவும் நாளைக்காகவும் முன்கூட்டியே தெரிவித்திருந்தார் "1930 க்குப்பின் கல்லூரிச் சபைக் கூட்டம் நடக்கும்" என்று அவர் வாழும்போதே எழுதித் தெரிவித்திருந்தார்" என்று திரு சங்கரப்பிள்ளை அவர்கள் உணர்ச்சியுடன் சொன்னார்

நல்லூர் கலைமகள் வீதியில் வழமைப் பொலிவுடன் விளங்கும் சாமஹாலில் அமைதியாக அண்டியவர்களுக்கெல்லாம் மலர்ந்த முகத்துடன் அயராது பசிப்பிணி போக்கி சேவைப்பணி ஆற்றிவரும் திரு சங்கரப்பிள்ளை ஒரு "குட்டி இராமநாதவள்ளலாகவே" எனக்குத் துலங்கினார்

## சேர். பொன்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி ஆங்கிலச் சேவையில் நவம்பர் 26-ம் திகதி இரவு திரு. வைத்திலிங்கம் இராமநாதன் அவர்களைப் பற்றி ஒரு பேச்சு நிகழ்த்தினார். அப்போது இலங்கை வானொலி இயக்குநராகவிருந்த திரு. தெனிஸ் ஜயவீர (அவரே ஒரு சிறந்த இலக்கிய கலாசார விற்பன்னர்) இத்தகைய புலமை யாழ்ப்பாணத்தில் மறைந்து இருப்பதைக்கண்டு வியக்கிறேன் என்று பாராட்டினார்.

இந்த நூலிலும் திரு. வைத்திலிங்கம் கையாண்டுள்ள நடையில் அவரது ஆங்கில இலக்கியச் செறிவு அணிநடம் புரிவதைக் காணலாம். தித்திக்கும் தேனூறு போன்ற படிப்பவரைப் பொருளின் தாக்கம் தோற்றுத இன்பத்தில் ஆழ்த்திச் செல்லும் அழகியநடை. இது பலருக்குப் பயன்தரும். முயற்சிவெல்ல ஒவ்வொரு தமிழரும், ஒவ்வொரு தேசாபிமானியும் சாகித்திய வைத்திருக்க வேண்டிய அரிய நூல்.

## மழையின்றி யாழ்.

## விவசாயிகள் பெரும் கஷ்டம்

### நிவாரணம்தேட உதவி அரசாங்க அதிபர் முயற்சி

(குருநகர் நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதைய காலபோக நெல்வேளாண்மை சம்பந்தமாக ஆபத்தான நிலை காணப்படுகின்றது. போதிய மழை இல்லாதினால் வயல்களில் அதிகமாகக் களை காணப்படுகின்றது. களைகொல்லி மருந்து, கிருமிநாசினிகள் முதலியனவாவிப்பதற்கு மழை இல்லாதிருக்கின்றது. இந்தநிலை விவசாயிகளையும், அரசாங்க அதிகாரிகளையும் பெரும் திகிலாக்கியிருக்கின்றது

இவ்வாறு உணவு உற்பத்திசம்பந்தமாகப் பொறுப்பதிகாரியாகவுள்ள உதவி அரசாங்க அதிபர் திரு சி. முருகேசம்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சி அக்கராயன் குளம், துணுக்காய் அம்பகப்பெருமாள் குளம், கோட்டை கட்டின குளம் முதலிய இடங்களைப்பார்வையிட்டு அக்குளங்களில் தண்ணீர் இல்லாதிருப்பதை தெரிந்துகொண்ட திரு. முருகேசம்பிள்ளை, இங்குள்ள பல சைவ ஆலயங்களிலும் விசேஷ பூசைகள், அபிஷேகங்கள், மூர்த்தி முதலியன ஒழுங்கு செய்யும்படி அப்பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குப் புத்திமதி கூறியுள்ளார்.

இக்குளங்களில் 25 அடிக்கு மேற்பட்ட ஆழமான தண்ணீர் உள்ள இரணைமடுக்குளத்தில் தற்பொழுது 6 அடி ஆழமுள்ள தண்ணீர் மட்டும் இருப்பதாகவும் இதனால் தற்போதைய காலபோக வேளாண்மையைக் காப்பாற்றுவது கஷ்டமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசாங்கத்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று ஆராய்வதற்காக அரசாங்க அதிபர், பொறியியல் அதிகாரிகள், விவசாய அதிகாரிகள் ஆகியோருடன் தாம் தொடர்புகொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆட்சிமன்றத்தில் 'ஈழநாடு!'

இலங்கை முன்னணி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் ஆட்சிமன்றத்தில் ஒன்பது தினங்களாக நடைபெற்றபோது "ஈழநாடு" பத்திரிகையும் அதில் இடம் பெற்றது.

விவாதத்திற் கலந்துகொண்டு ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் மரவரி முறை யோசனை சம்பந்தமாகக் குறிப்பிடுகையில் வடபகுதிக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் விடுத்த அறிக்கையொன்று "ஈழநாடு" பத்திரிகையில் வெளிவந்திருப்பதாகத் தெரிவித்து அதைச் சபையில் வாசித்துக் காட்டினார்.

சென்ற வியாழக்கிழமை இரவு விவாதத்தை முடித்து வைத்து நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் ஒரு கட்டத்தில் "ஈழநாடு" பற்றிக் குறிப்பிட்டார்.

வரவு-செலவுத் திட்டம் நிதியமைச்சரால் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் சீனி பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்படவிருப்பதாகவும் மேலதிகமாக வாங்கும் சீனிக்கு ருத்தலுக்கு ஒன்றரை ரூபாய் கொடுக்கப்படவேண்டுமென்றும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளிவந்திருந்ததாகவும் பலர் அதில் இலாபம் சம்பாதித்துள்ளதாகவும் தனக்குத் தெரியக்கூடியதாகச் சுன்னாகத்தில் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம் பெருமளவில் சீனியை விற்றதாகவும் உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டிருந்தார். இவரது பேச்சு "ஈழநாடு" பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

பெருமளவில் சீனி விற்கப்படவில்லையென்றும் உரிய கோட்டாவின்படியே சீனி விற்கப்பட்டதாகவும் அதன் விபரங்களையும் தெரிவித்து சுன்னாகம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தினர் எழுதியிருந்த கடிதத்தை நிதி அமைச்சர் ஆட்சிமன்றத்தில் வாசித்துக்காட்டும்பொழுது "ஈழநாடு" பத்திரிகையில் வெளிவந்த செய்தி பற்றிக் குறிப்பிட்டார்.

## ஈழநாடு

பிரஜோற்பத்தி வருடம் கார்த்திகை மாதம் 12 ம் திகதி (28—11—71)

## அந்த ரகசியம்

இராமநாத வள்ளல் மறைந்த பின்னும் வாழ்கின்றார்கள். அவரது வாழ்க்கை அவ்வளவு வெற்றி பெற்றதின் ரகசியம் என்ன?

இதைப்பற்றி அவரது வாழ்க்கை வரலாற்று நூல் எழுதியுள்ள வைத்திலிங்கம் அவர்களைக் கேட்டதற்கு வள்ளலின் அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கையும் பக்தியும்தான் என்றார்.

"பக்தியினாலே தெய்வ பக்தியினாலே இந்தப் பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி! சித்தம் தெளியும்... ..." என்று தொடங்கும் அமரகவி பாரதியாரின் கீதம் நினைப்பு வருகிறது. அப் பாடலுக்கு ஓர் இலக்கியம் போல் இயங்குகின்றது பெரியார் ராமநாதன் அவர்களது வாழ்க்கை.

ருஷ்ய புரட்சியைப் போற்றிப் பாடிய அந்த பாரதியார்தான் பக்தியைப் பற்றியும் பாடியுள்ளார். பாரதியாரின் நம்பிக்கை கொண்டு, தெய்வபக்தியில் நம்பிக்கை யற்றவர்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

பக்தியினால் ஏற்படக்கூடிய மேன்மைகள் குறித்து அவர் பாடியுள்ளவை நிச்சயம் யாவரையும் ஏமாற்றுவதற்கு இருக்க முடியாது.

வள்ளலுடன் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்த அன்பர் ஒருவர் 'தங்களைத் தனியே விட்டுவிட்டுச் செல்ல வருந்துகிறேன்' என்று கூறியபோது, 'தனியே இல்லை. நெஞ்சில் இவைப் பொழுதும் ஒருவன் நீங்காதிருக்கிறான்' என்று பதிலளித்தாராம் அவர். எடுத்ததற்கெல்லாம் "பரமேசுவரன் இருக்கின்றார்" என்றுதான் கூறுவாராம்!

செயற்கரிய செய்த இராமநாத வள்ளல், மகாத்மா காந்தி இவர்களைச் சாதனைகளுக்கு பாரதியார் கூறியபடி பக்திதான் காரணமாயின், நம் வாழ்வும் மேன்மையுற அவர்கள் காட்டிய வழியை நாமும் ஏன் பின்பற்ற முயலக் கூடாது.

## மலைவைக்கு

[4ம் பக்கத் தொடர்ச்சி]

னும் வரை நாங்கள் ஈடுபடுத்தலாம். அத்துடன் வாளிகள் நாட்டின் தேவையையும் நாங்கள் பூர்த்தி செய்ய முயற்சிக்கலாம்.

### 60 டசின் வாளிகள்

எங்கள் தொழிலாளர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள் தினம் ஒன்றுக்கு 60 டசின் வாளிகளை உற்பத்தி செய்கின்றனர். 7 அங்குலத்திலிருந்து 14 அங்குலம் வரை இந்த வாளிகள் 8 அளவுகளில் செய்யப்படுகின்றன.

உங்கள் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் வாளிகளுக்கு "எல் பி ஹெம்" எனச் சின்னம் வைக்கப்பட்டிருப்பதற்கு விளக்கம் தரவேண்டும் என்று நான் கேட்டபொழுது அவர், "நான் முன்பு கொழும்பில் லக்சா L) பிட்டிஷ் (B ஹற் (தொப்பி - Hat) மார்க் (M-Mark) என்பதை சேர்த்து LBBM எல்பிஹெம் ஹவுஸ்" என பெயர் அமைத்துத் தொழில் நடத்தினேன். அதைப் போலவே இங்கும் அமைத்தேன் என்று கூறிய திரு. சின்னத்தம்பி தம்மோடு பங்காளர் தமது மக்களாகிய திருவாளர்கள் ஏ. சி. கிருஷ்ணராசா, சி. வரதராஜா ஆகியோரையும் சேர்த்துள்ளதாக கூறினார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இராமநாதன் நூலக திறப்பு விழா

வண்ணை நகர் இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் இன்று மாலை சேர் பொன் இராமநாதன் நூலகத் திறப்பு விழா, முதலாம் ஆண்டு நிறைவு விழா ஆகியவற்றை ஒருங்கே கொண்டாடவிருக்கின்றனர் திரு. மு. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு. க. சொக்கலிங்கம் சிறப்புரையாற்றுவார்.

## ஆக்கிரமிப்பாளருக்கு ரஷ்ய உதவி

### என சீனா குற்றச்சாட்டு

நியூயோர்க், நவ. 27

பாகிஸ்தானின் இந்தியப் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு எதிராக சோவியத் யூனியன் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவி புரிந்துவருவதாக ஐக்கிய நாடுகள் சபையில் சீனப் பிரதிநிதி குற்றஞ்சாட்டியுள்ளார். சீனா எப்பொழுதும் பாகிஸ்தானையே இப்பிரச்சினையில் ஆதரித்து வரும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய பாகிஸ்தான் நிலைமைபற்றி மாஸ்கோவிலும் வாஷிங்டனிலும் ஆலோசனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இருநாடுகளுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு நிலையிலும் போராக வெடிக்கலாமென்றும் அதைத் தவிர்ப்பதற்கு பல நாடுகள் தனித்தனியாகவும் கூட்டாகவும் ஆலோசனைகள் செய்துவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.